பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 கார்த்திகை 11 திங்கட்கிழமை (26-11-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:365

# திருகோணமலைத் துறைமுகம் மீது புலிகள் பெரும் தாக்குதல் திட்டம்!

## அம்பலமாகி விட்டதாக படைத்தரப்பு கூறுகிறது

கொழும்பு,நவம்பர்.26

**கட்டுநாயக்கா விமானப் படைத் தளம் மற்றும் விமான நிலையம் மீது நடத்தியது போன்று திருகோணமலைத் துறைமுகம் மற்றும் கடற்படைத் தளம் மீதும் பெரும் தாக்குதல் ஒன்றை நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்தனர் எனவும் -**

**எனினும் அதைத் தாங்கள் நேரத்துடன் கண்டு பிடித்து முறியடித்து விட்டதாகவும் -**

**பாதுகாப்புப் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

சிவகரன் என்ற கடற்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரைத் தாங்கள் கைது செய்ததை அடுத்தே புலிகளின் இரகசியத் திட்டம் அம்பலத்துக்கு வந்ததாகப் படைத்தரப்பு கூறுகின்றது.

கடற்படையின் கிழக்குத் தலைமையகம் அமைந்துள்ள திருகோணமலை கடற்படைத் தளம் மற்றும் துறைமுகம் மீதான புலிகளின் உத்தேச தாக்குதல் திட்டம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

முதற்கட்டமாக -

கடற்படை பயன்படுத்துவது போன்ற 'ஹ-ஏஸ்' வான் ஒன்றில் நிறைய வெடிமருந்தை ஏற்றிவந்து, கடற்படைத் தளத்தின் பிரதான வாயிலில் மோதி வெடிக்க வைத்து வாசலைத் தகர்ப்பது -

இதற்குத் தேவையான வெடிபொருள்களை 'பிஸ்கட்' பெட்டிகள் போன்று அடுக்கி, மறைவாக எடுத்து வந்து நகரில் இரகசிய இடத்தில் முன்கூட்டியே பதுக்கி வைத்துக்கொள்வது -

முன் வாசலில் நடத்தப்படும் பெரும் வெடிகுண்டுத் தாக்குதலை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## காத்தான்குடியில் ஐ.தே.க. அலுவலகம் தாக்கப்பட்டது

கொழும்பு,நவ.26

காத்தான்குடி ஐ.தே.க. காரியாலயம், சனி நள்ளிரவு இரண்டு மணியளவில் ஆயுத சகிதம் வந்த குண்டர்களால் தாக்கி நொருக்கப்பட்டது.

இந்தக் குண்டர்கள், இலக்க மற்ற 'பிக்அப்' வாகனம் ஒன்றில் வந்து, காரியாலயத்தை உடைத்து உட்புகுந்தனர். துப்பாக்கி வேட்டுக்களைத தீர்த்து, ஆதரவாளர்களையும் தாக்கி அச்சுறுத்திச் சென்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக, மட்டக்களப்பு மாவட்ட ஐ.தே.க. வேட்பாளர் அல்ஹாஜ் எம்.சீ. ஜெலால்தீன் காத்தான்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலையில் 3 போராளிகள் மரணம்

வவுனியா,நவ.26

அரியாலைப் பகுதியில் கடந்த வியாழனன்று கடற்படையினருடன் ஏற்பட்ட மோதலில் தமது தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

மேஜர் மதுரன் (சிவயோன் யேசுதாசன் - யாழ்ப்பாணம்)

மேஜர் தமிழ்க்குமரன் (தெய்வேந்திரன் தேவரூபன் - யாழ்ப்பாணம்)

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கந்தளாயில் ரணில் பிரசாரம்

கந்தளாய்,நவ.26

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 30 ஆம் திகதி கந்தளாய் வருகிறார்.

திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் ஐ.தே.கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் பிரசாரக் கூட்டத்தில் அவர் உரையாற்றுவார்.

## மாவீரர் தினத்தை ஒட்டி பிரசாரங்கள் நிறுத்தம்!

யாழ்ப்பாணம்,நவ.26

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினத்தை ஒட்டி இன்றும் நாளையும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை நிறுத்திவைக்க சில கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன.

மாவீரர் தினமான நாளை செவ்வாய்க்கிழமை தேர்தல் பிரசாரங்களை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு மேற்கொள்ளாது.

உயிர் நீத்த போராளிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்புப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

சுதந்திரப் போராட்டத்தில் தம்முயிரைத் தியாகம் செய்த போராளிகளின் தற்கொடைக்குப் பெருமை சேர்த்து, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இன்றும், மாவீரர் தினமான நாளையும் புளொட் அமைப்பின் சகல தேர்தல் பிரசார வேலைகளும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அந்த அமைப்பின் யாழ்.மாவட்ட வேட்பாளர் அன்ரன் (16 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியிலும் கிழக்கிலும்

## மாவீரர் தின நிகழ்வுகள் எழுச்சிபூர்வமாக ஆரம்பம்!

வவுனியா,நவ.26

வன்னியிலும், கிழக்கிலும் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று எழுச்சிபூர்வமாக ஆரம்பமாகின.

வன்னியில் நேற்றுக் காலை 8 மணி 8 நிமிடமளவில் கொடியேற்றலுடன் மாவீரர் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் கொக்கட்டிச்சோலையில் கொடியேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார். கரடியனாறு, கரவை, வாகரை, ஆண்டான்குளம் ஆகிய இடங்களில் பிரதேச தளபதிகள் கொடியேற்றி வைத்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

### அரசு - ஐ.தே.க. ஆதரவாளர் மோதல்:

## பலாங்கொடை நகரில் நேற்றிரவு ஊரடங்கு!

கொழும்பு,நவ.26

பலாங்கொடை நகரில் சனி இரவு முதல் நேற்றுக் காலை வரை ஐ.தே.க. ஆதரவாளர்களுக்கும் பொ.ஐ.முன்னணி ஆதரவாளர்களுக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்றிருக்கிறது. இச்சம்பவத்தில் ஓட்டோ சாரதி ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார்.

இந்த மோதல்களை அடுத்து பலாங்கொடை பொலீஸ் பிரிவில் நேற்றிரவு எட்டு மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இன்று அதிகாலை 5.30 மணிக்கு ஊரடங்கு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

அநுராதபுரத்திலும் இருதரப்பு ஆதரவாளர்களிடையேயும் மோதல்கள் நடந்திருக்கின்றன. இதில் ஒருவர் கொல்லப்பட்டார்; மூவர் காயமடைந்தனர்.

(ஐ-3-6)

## தமிழகத்தில் பல இடங்களில் மாவீரர் தின நிகழ்வுகள்

சென்னை,நவ.26

தமிழ் நாட்டில் பல இடங்களிலும் தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இன்று திங்கட்கிழமை புதுக்கோட்டையில் மாவீரர்தின நிகழ்வு நடைபெறும். இதில் பழ.நெடுமாறன், பாவாணன் ஆகியோர் உரையாற்றுவர்.

மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நாளை செவ்வாய்க்கிழமை விழுப்புரத்தில் பிரமாண்டமான நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தமிழ் நாட்டைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் பலர் அந்த வைபவத்தில் கலந்துகொள்வர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை தர்மபுரம் மாவட்டத்தில் ஈழத்தமிழர் ஆதரவு எழுச்சி மாநாடு நடைபெற இருந்தது.

(ஐ-6)

## சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தால் மீண்டும் நாட்டில் ஆயுதக் கிளர்ச்சி!

### ஜே.வி.பி. முன்னெடுக்கும் என்கிறார் சோமவன்ஸ

கொழும்பு,நவ.26

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து போகும் நிலை ஏற்பட்டால் நாங்கள் மீண்டும் ஆயுதக் கிளர்ச்சியை முன்னெடுப்போம். இதனை ஏற்கனவே நாம் ஐக்கிய நாடுகள் சபைக்கு தெரிவித்து விட்டோம்.

- இவ்வாறு கூறியிருக்கிறார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க.

பன்னிரண்டு வருடகால அஞ்ஞாத வாசத்தை முடித்துக் கொண்டு, கடந்த வாரம் நாடு திரும்பிய அவர் தனது கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றி வருகிறார்.

மீண்டும் ஆயுதம் ஏந்திப் போராட ஜே.வி.பி. எப்போதும் தயாராக இருக்கிறது. எமது தலைவர் றோஹண தனிப்பட்ட எவருக்கும் எதிராக எங்களை வளர்க்கவில்லை. எமக்கு தனிப்பட்ட எதிரிகள் கிடையாது.



ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருவதை நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை. ஏனென்றால் இந்த நாட்டில் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்தது அந்தக் கட்சியின் ஆட்சிதான் - என்றும் சோமவன்ஸ தெரிவித்திருக்கிறார். (ஐ)

## வன்செயல் கண்காணிப்பு நிலையம் ஜனாதிபதி செயலகத்தில் இயங்கும்

கொழும்பு,நவ.26

தேர்தல் வன்செயல்களைக் கட்டுப்படுத்த கண்காணிப்பு நிலையம் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்கென நாடு முழுவதும் 10 ஆயிரம் கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்படுவர். அவர்கள் உடனுக்குடன் இந்த நிலையத்துக்கு தகவல் அனுப்புவர்.

வன்செயல் நடந்த பகுதியில் உடன் நடவடிக்கையை இந்த நிலையம் மேற்கொள்ளும்.

மதகுருமார்கள், கட்சிகளின் அமைப்பாளர்கள், பல்துறைசார் பிரமுகர்கள் இதன் கண்காணிப்பாளர்களாகச் செயற்படுவார்கள்.

ஜனாதிபதியின் மேற்பார்வையில் இந்த நிலையம் செயற்படும். (ஐ)



நான்கு கட்சிகள் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாண மாநகர சபையில் கருத்தொருமித்து ஏகமனதாகத் தீர்மானங்களை நிறைவேற்றியும் பணியாளர்களுடன் பண்பாகப் பழகியும் எம் அனைவரையும் கவர்ந்த யாழ். நகர பிதா - மாண்புமிகு மாநகர முதல்வர்

நடராஜா இரவிராஜ்

சிதறியிருக்கும் தமிழர் அமைப்புக்களை ஓரணியில் திரட்டி, எம் இனத்தின் விடுதலைக்கு வித்திடும் ஆற்றல் படைத்த இளைய தலைமுறையினரின் ஒளிவிளக்கு!

அவருக்கே உங்கள் வாக்கை வழங்கிடுவீர்

யாழ்.மாநகரசபை வாக்காளர்களும், ஒய்வுபெற்ற உத்தியோகத்தர்களும் - நல்லூர்.

| அளித்திடுவீர் உங்கள் வாக்கை | | |
|---|---|---|
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X |
| வெற்றி இல. | 9 | X |

(93946)

# 'சுடர் ஒளி' செய்தியாளருக்கு கிழக்கில் கொலை அச்சுறுத்தல்

கொழும்பில் வெளியாகும் 'சுடர் ஒளி'க்கு தேர்தல் செய்தி அனுப்பியது சம்பந்தமாக 'சுடர் ஒளி' அட்டாளைச்சேனை செய்தியாளருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கிறது. சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவரே துப்பாக்கி சகிதம் சென்று செய்தியாளரை வழிமறித்து துப்பாக்கியை நெஞ்சுக்கு நேரே நீட்டியவாறு கொலை அச்சுறுத்தலை விடுத்தார். கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தலை தூக்கித் தாண்டவம் ஆடும் தேர்தல் வன்செயல்களில் மற்றொரு பரிமாணம் இது. பத்திரிகையாளர்களுக்கும் குறிவைக்கப்படுகிறது.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தேர்தலில் ஈடுபடக்கூடாது என்று தேர்தல் ஆணையாளர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

'சுடர் ஒளி' அட்டாளைச்சேனை செய்தியாளர் எஸ்ரமீஸ் அக்கரைப்பற்றுக்குச் செல்லும் வழியில் கடற்கரை வீதிப் பாலத்தடியில் வைத்தே வழி மறித்து, துப்பாக்கியை நீட்டி அச்சுறுத்தப்பட்டார். சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் தாம் ஆதரிக்கும் அரசியல் கட்சி வேட்பாளர் ஒருவரின் பிரசாரக் கூட்டச் செய்திகள் தாம் எதிர்பார்த்த அளவில் 'சுடர் ஒளி'க்கு அனுப்பப்படவில்லை என்று செய்தியாளர் மீது [illegible] அடைந்து கொலை அச்சுறுத்தல் விடுத்தார்.

இது சம்பந்தமாக செய்தியாளர் ரமீஸ் அக்கரைப்பற்று பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

'சுடர் ஒளி' அக்கரைப்பற்றுப் பொலஸாருடன் தொடர்பு கொண்டு இந்த விஷயம் பற்றிக் கேட்டபோது விசாரணை நடைபெற்றுவருகிறது. தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

தமக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதை ரமீஸ் பிரதேச பத்திரிகையாளர் சங்கத்தின் கவனத்திற்கும் கொண்டுவந்திருக்கிறார்.


## மரண அறிவித்தல்

### அப்பாக்குட்டி தம்பையா

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாக்குட்டி தம்பையா நேற்று (25.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் இலட்சுமியின் அன்புக் கணவரும் உதயணன் (ஜேர்மனி), உதயகுமாரி, உதயசௌந்தரி (கனடா), உதயேந்திரன் (சுவிஸ்), உதயேஸ்வரி (4 ஆம் வருட கலைப்பீட மாணவி, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் மங்களேஸ்வரி (ஜேர்மனி), உதயமூர்த்தி (இலங்கை வங்கி மேற்தரக்கிளை), குருபரன் (கனடா), சிவமலர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் உஷாந்தன், மதுரன், பவித்தியா, யுகேஸ், தனுஷா, லக்ஷ்மி, லக்ஸ்மன், சங்கவி ஆகியோரின் பிரியமுள்ள பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று இராமநாதன் வீதி, நாயன்மார் கட்டிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் தகனக்கிரியைகள் செம்மணி இந்து மயானத்தில் இடம்பெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*நாயன்மார்கட்டு.* (94954)

தகவல்:
குடும்பத்தினர்





உழைக்கும் மக்களின் உரிமைக்குரல் ஒலிக்க, தமிழ்த் தேசிய இன விடுதலையின் உந்து சக்தியாக உழைத்திட தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

**திரு.வீ.ஜீ.தங்கவேல்** அவர்களே

**5-12-2001** X 10 எங்கள் தெரிவு **10**

(93920)







# தி.மகேஸ்வரனுக்கு ஏன் வாக்களிக்க வேண்டும்?

* இந்த நாட்டில் கடந்த ஏழு ஆண்டு காலமாகத் தமிழ் மக்களை அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தக் காரணமாக இருந்த அவசரகாலச் சட்டத்தை -

  பெரும்பான்மையினரை அதிகமாகக் கொண்ட ஒரு தேசியக் கட்சியில் அங்கம் வகித்துக் கொண்டு, அதன் ஏனைய 88 எம்.பிக்களையும் தன் வழி திருப்பி, அச்சட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வைத்து, தொடர்ந்து அதனை அரசினால் நீடிக்க முடியாமல் செய்து, காலாவதியாக்கச் செய்த அரசியல் இராஜதந்திரத்துக்காக......!

* சிங்கள, பௌத்த பேரினவாத அரசு கடந்த ஒக்ரோபரில் பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கான திருத்தத்தைக் கொண்டு வந்த போது, பேரினவாதக் கட்சியின் ஒரேயொரு தமிழ் எம்.பியாக இருந்து கொண்டு, கட்சியின் தீர்மானத்தையும் மீறி, அந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து தனித்து நின்று வாக்களித்ததற்காக.....!

* ஈழத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை உட்பட்ட அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் பொங்கு தமிழ்ப் பிரகடனத்தில் ஒப்பமிட்டு, தன் இன உணர்வை வெளிப்படுத்திய ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்காக.....!

* விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் தடை விதிக்கும் முயற்சியை மூர்க்கமாக எதிர்க்கும் ஒரு தமிழன் என்பதற்காக.....!

இந்தப் பொதுத் தேர்தலில் தி.மகேஸ்வரன் அவர்களை மீண்டும் ஆதரித்து அவரை நாடாளுமன்றுக்கு அனுப்புவோம்.

# முதன்மை வேட்பாளர் தி.மகேஸ்வரன் அவர்களுக்கே எமது வாக்குகள்!

**ஐக்கிய தேசியக் கட்சி** X 4

(C19468)

- நல்லூர் மக்கள் -

# குண்டூஸ் நகர் மீதான முற்றுகை இறுதிக் கட்டத்தை அடைகிறது!

காபூல்,நவ.26

வடக்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் வசமுள்ள கடைசி நகரான குண்டூஸில் வடக்குக் கூட்டணியின் முற்றுகை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அங்கு சிக்கியுள்ள தலிபான்களில் சுமார் ஆயிரம் பேர்வரை நேற்றுமுன்தினம் சரணடைந்தனர்.

குண்டூஸின் மேற்குப்புறம் வழியாக 600 தலிபான்களும் கிழக்குப் பாதையூடாக 8 டாங்கிகள், 10 வாகனங்கள் மற்றும் ஆயுதங்களுடன் 800 தலிபான்களும் வெளியேறி வடக்குக் கூட்டணியினரிடம் சரணடைந்ததாக உஸ்பெக் தளபதி தோஸ்தம் நேற்றுச் செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆயினும் ஒஸாமா பின்லேடனுக்கு விசுவாசமான வெளிநாட்டு வீரர்கள் இன்னமும் குண்டூஸிலேயே தங்கியுள்ளனர். அவர்கள் இறுதிவரை இஸ்லாத்துக்காகப் போரிட்டு மடியப் போவதாக அறைகூவல் விடுத்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து குண்டூஸ் நகருக்குள் புகுந்து தலிபான்கள் மீது தாக்குதல் நடத்த முன் நடவடிக்கைகளில் வடக்குக் கூட்டணி ஈடுபட்டுள்ளது.

காபூலின் மேற்கே மைதான் சகார் நகரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான மோதல், அங்கிருந்த சுமார் 2 ஆயிரம் தலிபான்கள் நேற்று ஆயுதங்களை ஒப்படைத்ததால் அமைதியாக முடிவடைந்தது.

இதேசமயம், ஒஸாமா பின்லேடனைத் தேடிப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க விமானங்கள் நேற்று கந்தகாரையும் தெற்கு ஆப்கானின் மலைக் குகைகளையும் தாக்கின.

பின்லேடனின் அல்கெய்டா அமைப்பு ஆப்கானில் செயற்பட்டு வந்த அனைத்து இடங்களிலும் தேடுதல் வேட்டை நடத்திவரும் அமெரிக்க இராணுவ அணிகள் பின்லேடனின் இருப்பிடம் குறித்த தகவல்களைத் திரட்டி வருகின்றன. (ஏ-9)

## குண்டூஸில் சிக்கியுள்ள

# பாகிஸ்தானியரைக் கொன்றால் ஆப்கான் அகதிகள் மீது தாக்கு!

## அடிப்படைவாதிகள் மிரட்டல்

இஸ்லாமாபாத்,நவ.26

ஆப்கானில் குண்டூஸ் நகரில் தலிபான் படையினருடன் சிக்கியுள்ள பாகிஸ்தானியப் போராளிகள் கொல்லப்பட்டால், பாகிஸ்தானில் தஞ்சமடைந்துள்ள, வடக்குக் கூட்டணிப் பிரதேசங்களைச் சேர்ந்த அகதிகளை குறிவைத்துத் தாக்கப் போவதாக பாகிஸ்தானிய அடிப்படைவாதக் கட்சியொன்று எச்சரித்துள்ளது.

தெஹ்ரிக்கி நிவாஸ் ஷரியத் இ முகமட் என்ற அடிப்படைவாதக் கட்சியே இந்த மிரட்டலை விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகளை எதிர்த்துப் போரிடுவதற்காக, தலிபான்களுக்கு ஆதரவாக ஆயிரக் கணக்கான பாகிஸ்தானியத் தொண்டர்களைத் திரட்டி இந்தக் கட்சி அனுப்பி வைத்திருந்தது.

அவர்களில் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் தற்போது குண்டூஸ் நகரில் வடக்குக் கூட்டணியின் முற்றுகைக்குள் சிக்கியுள்ளனர். அவர்கள் சரணடையவும் மறுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், குண்டூஸில் சிக்கியுள்ள பாகிஸ்தானியப் போராளிகள் ஆப்கானிஸ்தானை விட்டுப் பாதுகாப்பாக வெளியேற அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் -

வடக்குக் கூட்டணியினர் அவர்களை தாக்கிக் கொன்றால், பாகிஸ்தானில் உள்ள வடக்குக் கூட்டணிப் பகுதி மக்கள் தாக்கப்படுவார்கள் என்றும் -

அந்தக் கட்சி எச்சரித்துள்ளது.

வடக்குக் கூட்டணிப் படையினரின் குடும்பங்கள் பலவும் தற்போது பாகிஸ்தானில் பாதுகாப்புக் கருதித் தங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.(ஏ-9)

# இனிமேல் வெளிநாட்டுப் படைகள் ஆப்கான் வருவதை விரும்பவில்லை

## இப்படிக் கூறுகிறார் ரபானி

காபூல்,நவ.26

இனிமேலும் வெளிநாட்டுப் படைகள் தமது நாட்டுக்கு வருவதைத் தாம் விரும்பவில்லை என்று ஆப்கானிஸ்தானின் முன்னாள் அதிபர் பர்கானுதீன் ரபானி வலியுறுத்தியுள்ளார்.



ஆப்கான் தொடர்பான ஐ.நா. ஆதரவிலான கூட்டம் நாளை ஜேர்மனியின் 'பொன்' நகரில் நடைபெறவுள்ள நிலையில் ரபானி இவ்வாறு கூறியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

5.ஆண்டுகளின் முன்னர், தலிபான்கள் காபூலைக் கைப்பற்றிய போது, அதிபராக இருந்த ரபானி பதவி விலக்கப்பட்டார். பின்னர் ஈராக்கில் தங்கியிருந்த அவர், வடக்குக் கூட்டணிப் படைகள் காபூலை சமீபத்தில் கைப்பற்றியதும் காபூல் திரும்பினார்.

தன்னை ஆதரிக்கும் வடக்குக் கூட்டணியின் அனுசரணையுடன், ஆப்கான் அதிபராகிவிட ரபானி முயற்சிப்பதாகக் கூறப்படுகிறது. அதனாலேயே தலிபான்களை விரட்டும்வரை அமெரிக்க ஆதரவாளராக இருந்த ரபானி, தற்போது வெளி நாட்டுப்படைகள் ஆப்கானில் இருப்பதை விரும்பாதவராக தன்னைக் காட்டிக் கொள்கிறார்.

அமெரிக்கா மற்றும் ஐ.நாவைப் பொறுத்தவரையில் ஆப்கானில் பல்லின அரசொன்று அமைவதையே அவை விரும்புவது குறிப்பிடத்தக்கது. (ஏ-9)



போர் முனையில் ரமழான் தொழுகையில் ஈடுபட்டிருக்கும் வடக்குக் கூட்டணிப் படையினர் இருவரைப் படத்தில் காணலாம்.

# புஷ்ஷைக் கொல்ல உதவினால் நான்கு கோடி டொலர்கள் பரிசு!

## தலிபான்கள் அறிவிப்பு

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷை கொல்வதற்கு உதவுபவர்களுக்கு 4 கோடி டொலர்கள் பரிசளிப்பதாகத் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானின் மலைப் பிரதேசத்தில் மறைந்துள்ளதாகக் கூறப்படும் பின்லேடனை கண்டுபிடிக்க உதவுபவர்களுக்கு 2.5 கோடி டொலர்கள் பரிசளிப்பதாக அமெரிக்கா அறிவித்ததற்குப் பதிலடியாகவே தலிபான்கள் இவ்வாறு அறிவித்துள்ளனர்.

தலிபான் பாதுகாப்புத்துறை அதிகாரி சயீத் ஹக்கானி செய்தியாளர்களிடம் புஷ்ஷின் தலைக்கு விலை வைத்தது குறித்து பேசியபோது -

பின்லேடன் தலைக்கு புஷ் 2.5 கோடி டொலர்கள் விலை வைத்துள்ளதாகவும் -

பரிசுத் தொகைக்கு எந்த ஒரு இஸ்லாமியனும் மயங்கி மதத்தை இழிவுபடுத்தப் போவதில்லை என்றும் -

ஆப்கான் ஏழை நாடாக இருந்த போதிலும், புஷ்ஷைக் கொல்ல உதவுபவர்களுக்கு 4 கோடி டொலர்களைக் கொடுக்கத் தலிபான்களால் முடியுமென்றும் -

தெரிவித்தார். (ஏ)

# மதத்தின் பெயரால் யுவதிகளின் உறுப்புகளைச் சிதைத்த மூதாட்டி!

## கானா நாட்டில் நிகழ்ந்த கொடூரம்

அக்ரா,நவ.26

ஆபிரிக்க நாடான கானாவில் நான்கு இளம் பெண்களுக்கு - சமயச் சடங்கு என்ற பெயரில் - பெண் உறுப்புகளைச் சிதைத்து உணர்ச்சியற்றதாக்கியதாக 70 வயது பெண் சாமியார் கைது செய்யப்பட்டுள்ளார்.

கானாவின் பிரதான நகரமான குமாசிக்கு தெற்கே 100 மைல்கள் தொலைவில் உள்ள பாவோ என்ற கிராமத்தின் மதத் தலைவியான நாணயாவாவிரே என்ற மூதாட்டியே கைது செய்யப்பட்டவராவார்.

பெண்களின் அந்தரங்க உறுப்புகளை மதத்தின் பெயரால் சிதைக்கும் கொடூரம் கானாவில் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆயினும் சில கிராமங்களில் பெண்கள் தவறாக நடப்பதைத் தடுக்கும் சம்பிரதாயம் என்று கூறிக்கொண்டு, சிறுமிகளின் பெண் உறுப்புகளை சிதைத்து உணர்ச்சியற்றதாக்கிவிடும் கொடுஞ்செயல் இன்னமும் தொடர்கிறது.

உலக அரங்கில்

பாவோ நகரில் இத்தகைய கொடுரத்துக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் 14 முதல் 17 வயதுக்குட்பட்டவர்களாவர்.

இந்தக் கொடிய சடங்கிலிருந்து தப்பிப்பதற்காக அவர்கள் நால்வரும் தேவாலயமொன்றுக்குள் தஞ்சமடைந்திருந்தனர். ஆயினும் கிராமத் தலைவனான 80 வயது நானாபொசம்போவின் உத்தரவுப்படி இளைஞர் கும்பல் ஒன்று தேவாலயத்துக்குள் நுழைந்து, நான்கு யுவதிகளும் கதறக் கதற அங்கிருந்து இழுத்து வந்து, பெண்சாமியாரிடம் ஒப்படைத்தது. அதன் பின்னரே அந்தப் பெண்சாமியார் பெண்களின் உறுப்புகளைச் சிதைத்தார்.

வழக்கு விசாரணையில் குற்றம் நிருபிக்கப்பட்டால் பெண்சாமியார், கிராமத் தலைவன் உட்பட சம்பந்தப்பட்டவர்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை கிடைக்குமென்று கூறப்படுகிறது. (ஏ)

## இரண்டாம் உலக மகா யுத்தகால

# பாரிய மனிதப் புதைகுழிகள் போலந்தில் கண்டுபிடிப்பு!

வார்சோ,நவ.26

போலந்தில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஹிட்லரின் நாஜி படையினரால் ஆயிரக்கணக்கான யூதர்கள் கொன்று புதைக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளை அகழ்வாராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

1943ஆம் ஆண்டு ஒக்ரோபரில் நாஜிப் படைகள் ஆக்கிரமித்த சொபிபர் நகரிலேயே இந்தப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

உலக யுத்த காலத்தில் இராணுவ முகாமாகவும், தற்போது காடாகவும் உள்ள அந்த இடத்தில் ஆயிரக்கணக்கான யூதர்கள் நச்சுவாயு அறைகளுக்குள் அடைக்கப்பட்டு கொன்று புதைக்கப்பட்டதற்கான தடயங்கள மற்றும் சான்றுகள் கிடைத்துள்ளன.

போலந்து அரசு ஆவணங்களின் படி சொபிபரில் சுமார் 2 லட்சத்து ஐம்பதாயிரம் பேர் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

15 அடிகள் ஆழமுள்ள பாரிய 7 புதைகுழிகள் அப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் -

அவற்றில் இருந்த மனித எச்சங்களிலிருந்து குழிகளில் குவிக்கப்பட்ட சடலங்கள் அரைகுறையாக எரிக்கப்பட்டு, பின்னர் மண் போட்டு மூடப்பட்டது தெரியவந்திருப்பதாகவும் -

அகழ்வாராய்ச்சியாளர் அண்ரஸ் கோலா தெரிவித்தார். புதைகுழிகள் சுமார் 210 அடிகள் நீளமும் 75 அடி அகலமும் கொண்டவையாக இருந்ததாகவும் அவர் கூறினார்.

சொபிபர் பிரதேசத்தில் மருத்துவ முகாமாக இருந்த இடத்தையும் தாம் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிவித்த கோலா, அங்கு சிகிச்சை பெற்று வந்தவர்கள் நாஜிப்படைகளால் சுட்டுக்கொல்லப்பட்டதை, அங்கு சிதறிக் கிடந்த ஆயிரக்கணக்கான துப்பாக்கி ரௌத்துத் தோட்டாக்கள் உறுதிப்படுத்துவதாகவும் கூறியுள்ளார்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது 'சொபிபர்' நச்சுவாயு அறைகளில் ஆயிரக்கணக்கில் அடைக்கப்பட்ட யூதர்கள் குவியல் குவியலாக கொன்று குவிக்கப்பட்டதாக கூறப்படுவதற்கு தற்போதுதான் ஆதாரங்கள் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## விமான விபத்து!

சுவிற்ஸர்லாந்தில் சூரிச் விமான நிலையத்தின் அருகே விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதில் 7பேர் உயிரிழந்தனர். 28பயணிகள் மற்றும் 5 பணியாளர்களுடன் வந்துகொண்டிருந்த விமானம், சூரிச் விமான நிலையத்தில் இறங்குவதற்கு சற்று முன்னதாக விழுந்து நொறுங்கியது. (ஏ)

# பாப்பரசர் முதல் தடவையாக ஈ.மெயிலில் கோரிய மன்னிப்பு

வத்திகான்,நவ.26

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் முதல் தடவையாக மின்னஞ்சல் (ஈ.மெயில்) மூலம் மன்னிப்புக் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

பசுபிக் கடல் பகுதித் தீவு நாடுகளில் கத்தோலிக்க மதகுருமார்கள் புரிந்த பாலியல் குற்றங்கள் உட்பட நியாயமற்ற நடவடிக்கைகளுக்கு மன்னிப்புக் கோரும் கடிதத்தையே பாப்பரசர் மின்னஞ்சல் மூலம் அனுப்பினார்.



81வயதான பாப்பரசர் வத்திகானின் 'பிரஸ்கோட் கிளமென்டைன்' மண்டபத்தில் வைத்துக் கடந்த புதன் கிழமை 'லப்டொப்' கணனி மூலம் தனது பகிரங்க மன்னிப்புக் கடிதத்தை மின்னஞ்சலில் அனுப்பினார்.

இதற்கு முன்னர் கத்தோலிக்க மிஷனரிகள் செய்யும் தவறுகளுக்கு, கத்தோலிக்கத் திருச்சபையின் பொறுப்பாளர் என்ற வகையில், தவறிழைக்கப்படும் நாடுகளுக்கு விஜயம் செய்யும் சந்தர்ப்பங்களில் பாப்பரசர் மன்னிப்பு கோருவார்.

ஆனால் உடல் நிலை காரணமாக பசுபிக்கடல் பகுதித் தீவுக் கூட்டங்களுக்கு செல்லமுடியாத நிலையில், பாப்பரசர் இந்த மின்னஞ்சல் மன்னிப்பைக் கோரியுள்ளார். (ஏ)

# விதை உருளைக்கிழங்கு வராததால்
# குடாநாட்டு விவசாயிகள் பாதிப்பு

புன்னாலைக் கட்டுவன், நவ. 26

தென்னிலங்கையில் இருந்து விதை உருளைக்கிழங்கு எடுத்து வருவது தாமதமடைந்திருப்பதை அடுத்து உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

வலி. தெற்கு, வலி. வடக்கு மற்றும் வலி. கிழக்குப் பகுதிகளில் உள்ள பெரும்பாலான உருளைக்கிழங்குச் செய்கையாளர்கள் விதை கிழங்குக்கான இறக்குமதிக் கட்டணத்தை உரியவர்களிடம் செலுத்தி, பல மாதங்கள் கடந்து விட்டது. எனினும் விதைக் கிழங்கை எடுத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதேவேளை —

மேலும் பல விவசாயிகள் உருளைக்கிழங்குச் செய்கைக்காக தோட்டங்களை பண்படுத்தி தயார் நிலையில் வைத்திருந்தனர். எனினும் அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக சம்பந்தப்பட்ட நிலங்களில் மழை வெள்ளம் தேங்கியுள்ளது.

எனவே உருளைக்கிழங்குக்கான செய்கைக் காலம் முடிவடைவதற்கு முன்னர் விதை கிழங்கை யாழ். எடுத்து வர சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். (க-7-133)

# புதிய அரச ஊழியர்களுக்கு தேர்தல் பணி கிடையாது

## ஆணையாளர் கூறும் உறுதிமொழி

கொழும்பு, நவ. 26

அண்மையில் நியமனம் பெற்ற அரச ஊழியர்கள், மற்றும் அண்மையில் பதவி உயர்வுகளைப் பெற்ற அரச ஊழியர்கள் ஆகியோரைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதில்லை எனத் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்.

இத்தகைய ஊழியர்களைத் தேர்தல்பணிகளில் ஈடுபடுத்தினால் அரசியல் தில்லுமுல்லுகள் இடம்பெற வாய்ப்புகள் ஏற்படும் என்பதால் தனக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இந்த ஊழியர்களைத் தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்துவதில்லை எனத் தான் தீர்மானித்துள்ளதாகத் தன்னைச் சந்தித்த ஐ. தே. முன்னணித் தலைவர்களிடம் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# 1,400 காட்டு மரக்கன்றுகள் விவசாயிகளுக்கு விநியோகம்


யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். மாவட்டத்தில் விவசாய வனவியல் திட்டத்தின் கீழ் ஆயிரத்து 400 காட்டு மரக்கன்றுகள் யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் விவசாயத்துடன் சேர்ந்த காடு வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டே தேக்கு, சவுண்டலை போன்ற மரக்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

சாவகச்சேரி, உரும்பிராய், புங்குடுதீவு, கிரிமலை போன்ற 4 விவசாயப் போதனாசிரியர் பிரிவுகளிலும் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இந்தக் கன்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ஐ-180)

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் சின்னத்தம்பி சந்திரசேகரம்

(ஓய்வு பெற்ற P. W. D. ஓவசியர், R. M. C. R. D. A.)

| | |
|---|---|
| அன்னையின் மடியில் | ஆண்டவன் கழலில் |
| 24--07--1929 | 25--11--1993 |

திதி:- கார்த்திகை மாதம் பூர்வபக்க ஏகாதசி

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்ற ஐம்புலத்தார் ஓம்பல் தலை" என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வீற்றிருக்கும் எங்கள் குடும்பத் தலைவனை வணங்கி அஞ்சலி செய்கிறோம்.

- குடும்பத்தினர்.

'அன்பகம்'
இணுவில் மேற்கு,
இணுவில்.

(94938)

# உடுவில் ஆலய புனர்நிர்மாணம் துரித கதியில்

உடுவில் கற்பொக்கணை வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் புனர்நிர்மாண வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. கோயில் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன. வேலைகள் ஈவும் பூர்த்தியடைந்தவுடன் மகா கும்பாபிஷேகம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கோயில் புனரமைப்பு வேலைகளுக்கென சுன்னாகம் பிரதேச சபைத் தலைவர் க. கமலசேகரனின் சிபார்சுக்கமைய ஆறு லட்சம் ரூபாவை முதற்கட்டமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியுள்ளார்.

இதேவேளை —

வீரகத்தி விநாயகர் ஆலயத்துடன் இணைந்த கலைமதி முன்பள்ளியின் விளையாட்டுப் பூங்காவும் அமைக்கப்பட்டு பிள்ளைகளின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. மேற்படி விளையாட்டு பூங்காவுக்கு ஒரு லட்சம் ரூபாவும், முன்பள்ளிக்குத் தேவையான தளபாடக் கொள்வனவுக்கு 60 ஆயிரம் ரூபாவும் அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளன. (க-152)

## எரிகாயம்

மோட்டார் சைக்கிள் எண்ணெய்த் தாங்கியில் பெற்றோல் இருக்கிறதா என விளக்கு வெளிச்சத்தில் பார்த்தவர் முகத்தில் எரிகாயங்களுக்கு இலக்கான சம்பவம் புலோலியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த வீ. கஜேந்திரன் (வயது 28) என்பவரே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# வலிகாமம் தெற்குப் பகுதியில் தொடர்ச்சியான கடும்மழையால் மரக்கறி பயிர்கள் அழிந்து நாசம்

புன்னாலைக்கட்டுவன், நவ. 26

அண்மையில் தொடர்ச்சியாகப் பெய்த கடும்மழையை அடுத்து வலி. தெற்குப் பகுதியில் செய்கை பண்ணப்பட்ட பயிர்கள் பலவும் முற்றாக அழிந்துள்ளன.

குறிப்பாக புன்னாலைக் கட்டுவன், ஈவினை, குப்பிளான் போன்ற பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட பீற்றூற், கரட் போன்ற பயிர்கள் பெரும் அழிவைச் சந்தித்துள்ளன என விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள சில தோட்ட நிலங்களில் மழை வெள்ளம் தற்போது தேங்கியுள்ளதாகவும் —

பயிர் அழிவடைந்ததை அடுத்து பாதிகப்பட்ட விவசாயிகள் மீண்டும் தமது நிலங்களை உழுது பண்படுத்தி புதிதாக பயிர்களை நட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (க-7-133)

# குடாநாட்டில் பொருள்கள் விலை நாளுக்கு நாள் அதிகரிக்கிறது

யாழ்ப்பாணம், நவ. 26

குடாநாட்டில் தற்போது அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

மரக்கறி எண்ணெய் தேங்காய் எண்ணெய் முதல் முக்கிய பொருள்கள் எல்லாம் அதிகரித்த விலையிலேயே விற்கப்பட்டு வருகின்றன. சவர்க்காரவகைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. சன்லைட் 16 ரூபாவாகவும் லக்ஸ் 20 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

தனியார் கடைகளில் மண்ணெண்ணெய் ஒரு லீற்றர் 35 ரூபா விலை போகிறது

இதேவேளை மரக்கறிகளும் உச்ச விலையில் விற்கப்படுகின்றன. தேங்காய் 30 ரூபா முதல் 40 ரூபா வரை விற்பனையாகி வருகிறது. (க-139)

# குடாநாட்டில் பஸ் சேவைகள் சீராக நடைபெற்று வருகின்றன

## பாதிப்பு இல்லை என்கிறார் முகாமையாளர்

குடாநாட்டில் தற்போது வடபிராந்தியப் போக்குவரத்துச்சபையின் பஸ் சேவைகள் சீராக—பாதிப்பு ஏதுமின்றி—வழமைபோல் நடைபெற்று வருகின்றன.

— இவ்வாறுகூறுகிறார் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எஸ். மணிவாசகன்.

போக்குவரத்துச் சபைக்குத் தேவையான எரிபொருள்கள் முன்னரைப் போன்றே கிடைத்து வருகின்றன. இதனால்பஸ்சேவைகளை நடத்துவதில் எமக்கு எதுவித இடர்களும் ஏற்படவில்லை. வழமை போல் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன. சேவையில் எந்தவித மாற்றங்களோ குறைப்போ செய்யப்படவும் இல்லை. அப்படியான தேவை இதுவரை எமக்கு ஏற்படவும் இல்லை என்றும் பொதுமுகாமையாளர் விவரித்தார்.

பருத்தித்துறை டிப்போ பஸ்களின் சேவைகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரும் அரச ஊழியர்கள் மற்றும் பயணிகள் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இதுகுறித்து அவரிடம் கேட்கப்பட்ட போதே பொதுமுகாமையாளர் மேற்கண்ட விளக்கத்தைத் தெரிவித்தார்.

## மற்றொரு 'டிரக்' தடம் புரண்டது!

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் பருத்தித்துறையிலிருந்து சென்ற படையினரின் 'டிரக்' ஒன்று வல்லை வெளி சோதனைச் சாவடிக்கு அருகில் தடம் புரண்டது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தை அடுத்து போக்குவரத்து தடைப்பட்டு இவ்வழியே சென்ற வாகனங்கள், வல்லைச் சந்தியிலிருந்து தொண்டமானாறு வீதியூடாகத் திருப்பி விடப்பட்டன.

கடந்த புதன்கிழமையும் இதே வீதியில் புறாப்பொறுக்கி என்னும் இடத்தில் ஷெல் ஏற்றிவந்த 'டிரக்' தடம் புரண்டது தெரிந்ததே. (க-117)

### ச. ச. நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்கள்

# சமூகவிரோத செயல்களை ஒழிப்பதில் கூடிய சிரத்தை காட்டவேண்டும்

## அச்சுவேலியில் நடந்த திறப்புவிழா நிகழ்வில் உரை

அச்சுவேலி, நவ. 26

தற்பொழுது கிராமிய மட்டத்தில் அதிகரித்து வரும் சமூகவிரோதச் செயல்களையும் தற்கொலை முயற்சிகளையும் தடுத்து நிறுத்தித் தத்தமது கிராமங்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதில் சனசமூக நிலையங்கள் உள்ளிட்ட சமூகப் பொது அமைப்புக்கள் முக்கிய பங்களிப்பு வழங்க முடியும்.

இவ்வாறு கூறினார் வைத்திய கலாநிதி சி. விமலேந்திரன்.

அச்சுவேலி மேற்கில் நடைபெற்ற தந்தை செல்வா சன சமூக நிலையத் திறப்புவிழா தி. சங்கர் கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி சி. விமலேந்திரன்தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

சமகாலத்தில் அதிகரித்து வரும் சமூகவிரோதச் செயல்கள் மூலம் சாதாரண மக்களின் வாழ்க்கை சீரழிக்கப்பட்டு வருவதுடன் எதிர்காலச் சந்ததியும் பாதிக்கப்படும் அபாயநிலை தோற்றியுள்ளது. இதனை வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வரும் நோயாளர் ஊடாகக் கண்டுகொள்ள முடிகின்றது.

நாள்தோறும் சிகிச்சைக்கு வரும் நோயாளர்களில் கணிசமான எண்ணிக்கையினர் சமூகவிரோதச் செயல்களினால் பாதிப்புக்கு உள்ளானவர்களாக இருக்கிறார்கள்.

களவு போன்ற சட்டவிரோத மதுபான உற்பத்தியும், பாவனையும் அதிகரித்துச் செல்வது சாதாரண தொழிலாளர் குடும்பங்களைப் பெரும்பாதிப்புக்குள்ளாக்குகின்றது. தற்கொலை முயற்சி அதிகரித்து வருகின்றது.

கிராமிய மட்டத்தில் கல்வி அபிவிருத்தி, பொதுச் சுகாதாரம், சமூகவிரோதச் செயல்களை இல்லாது ஒழித்தல், சமூகமேம்பாடு போன்ற விடயங்களில் சனசமூக நிலையங்கள் ஆர்வத்தோடு செயற்படச்செய்தல் வேண்டும் எனக் கூறினார்.

வலி. கிழக்குப் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம், உபதலைவர் ஏ. ரவி உட்படப் பலர் விழாவில் கலந்துகொண்டனர். (க-11)

உதயன்

## நாளை வெளியாகும் மாவீரர் தின உரை

நாளை மாவீரர் தினம்.

தமது இனத்தின் இருப்புக்காக தம் சுய இருப்பையே அழித்தவர்களை நினைவுகொள்ளும் நாள்.

தமிழினத்தின் வரலாற்றில் மிக முக்கிய நாளாகக் கணிக்கப்படும் தினம் கூட.

தியாகத்தின் எல்லையில் - ஈகையின் உச்சத்தில் - தம்முயிரையே இனத்துக்காக ஆகுதியாக்கிய வீரபுருஷர்களை நினைவு கூர்வதற்காக தலைவர் பிரபாகரனால் மாவீரர் தினம் என்று பிரகடனப்படுத்தப்பட்ட நாள் இது.

மண் மீட்புக்காக ஒரு போர் இங்கு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்தத் தாயகம், இந்த மண்ணின் மைந்தர்களாகிய எங்களுக்கே உரியது. வரலாற்று ரீதியாக நாம் பிறந்து, வளர்ந்து, நிலைகொண்ட நிலம் இது. எமது வாழ்வுக்கும் வளத்துக்கும் ஆதாரமான இந்த நிலம் வரலாற்று ரீதியாகவே எமக்கு உரித்தானது. எங்கள் இனத்தின் தேசிய அடையாளத்துக்கு அடிப்படையானதும் இது தான்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலவி இருந்ததும், அதன் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும், அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும்" இந்த மண்ணில்தான்.

இந்த மண்ணின் விடுதலை என்ற நோக்கில் போராடும் விடுதலைப் புலிகள், இந்தநாளை மாவீரர் தினமாகப் பிரகடனப்படுத்தி, அதன் வழி மக்களோடு சேர்ந்து அதனை அனுஷ்டிக்கின்றார்கள்.

இத்தினத்தில், தலைவர் பிரபாகரன் விடுக்கும் மாவீரர் தினச் செய்தி அல்லது உரை, இலங்கையில் மட்டுமல்லாமல், முழு உலகினாலும் உன்னிப்பாக அவதானிக்கப்படுவது வழமை.

புலிகளின் கொள்கை விளக்கமாக - போக்கின் பாதைப் பிரகடனமாக - நடவடிக்கைத் திட்டமாக - அது கருதப்படுவது, அமைவது கண்கூடு.

இலங்கையிலே தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரமே இருக்கின்ற நிலையில், நாளை பிரபாகரன் தாம் ஆற்றப் போகும் உரையில் என்ன கூறப் போகின்றார் என்பதை எதிர்பார்த்து சகலரும் காத்திருக்கின்றார்கள்.

இந்தப் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் எந்த வழியை நாடுவது அல்லது கடைப்பிடிப்பது என்பது பற்றிய புலிகளின் சமிக்ஞை - வழிகாட்டல் - உத்தியோகப்பற்றற்ற முறையில் ஓரளவு மக்களுக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இது குறித்து மேலதிகமாக எதனையும் தலைவர் பிரபாகரன் கோடி காட்டுவாரா என்று தமிழர்கள் மட்டுமல்லாமல் முழு இலங்கையருமே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள்.

ஆனால் சிங்கள தேசத்தின் அரசினால் நடத்தப்படும் இத்தேர்தலுக்கு - அரசியல் பதவிகளுக்கான வெறும் வாக்கெடுப்புக்கு -

தன் தேசத்தின் விடுதலைக்காக தம்முயிர் ஈந்து, தேசத்தின் ஆன்மாவாக அதனோடு ஒன்றிப் போயிருக்கும் - விலைமதிக்கமுடியாத - ஈடு இணையற்ற - மாவீரர்களாகிய வீர புருஷர்களை நினைவு கூரும் நாளை ஒட்டிய உயர்ந்த செய்தியில் பிரபாகரன் இடங்கொடுக்கமாட்டார் என்றே நம்பப்படுகின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரும், ஜனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்புக்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் மாவீரர் தினம் வந்தது. தேர்தலில் தமிழ் மக்களின் போக்கு எப்படி அமையவேண்டும் என்பது குறித்து தலைவரின் செய்தியில் ஏதேனும் கோடி காட்டப்படும் என அப்போது எதிர்பார்த்தவர்கள் ஏமாந்து போனார்கள். அதே நிலைமைதான் இப்போதும்.

என்றாலும் மாவீரர் தினத்தின் பின்னர் - பொதுத் தேர்தலுக்கு முன்பாக - சர்வதேச ரீதியில் நடத்தப்படும் புலிகளின் ஏதேனும் நிகழ்வில் புலிகளின் மூத்த தலைவர் ஒருவர் தேர்தலை ஒட்டி தமிழ் மக்களை வழிகாட்டும் அறிவிப்பு எதனையும் விடுக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது.

எனினும், நாளைய மாவீரர் தின உரை -

இனப்பிரச்சினைக்குத் சமாதானத் தீர்வு காண்பதற்கான இறுதி வாய்ப்பு, மூன்றாம் தர மத்தியஸ்தம், பேச்சுக்கான சூழ்நிலை, இணக்கம் இல்லாவிட்டால் பிரிந்து செல்லவேண்டிய கட்டாயம்... ஆகியவற்றை வெளிப்படுத்தும் என எதிர்பார்க்கலாம்.

29ஆம் திகதி திருக்கார்த்திகை விழா:

## பக்தர்கள் மாவிட்டபுரம் செல்ல விசேட பயண ஏற்பாடுகள்

திருக்கார்த்திகை விழாவையொட்டி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அடியார்கள் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

எதிர்வரும் 29ஆம்திகதி நடைபெறவுள்ள திருக்கார்த்திகை விழாவுக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்குச் செல்ல விரும்பும் அடியார்கள் காலை 9 மணி முதல் தெல்லிப்பழை சோதனைச்சாவடியிலிருந்து பிரயாணத்தை மேற்கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 9மணி முதல் பி.ப. 3மணி வரையும் பஸ் சேவைகளை நடத்துவதற்கான ஒழுங்குகள் ஆலய ஆதீனகர்த்தா சு.து.சண்முகநாதக் குருக்களினால் செய்யப்பட்டுள்ளன.

## நாட்டு நடப்பு

களவு - XI

*சின்னம் சிறு பயலுக்குச் சீராகப் பயிற்சி தந்து*
*முன்னம் அவனை முறையாக உட்புகுத்தி - பின்னையவன்*
*கதவைத் திறந்துவிட்டு காத்திருக்கவிட்டுவிட்டு*
*இதமாக சுருட்டுவான் இரவு*

*- விகடகவி.*

# ஸ்ரீதர் தியேட்டரை விட்டு வெளியேறி வந்து ஈ.பி.டி.பியால் கூட்டங்களை நடத்த முடியுமா?

## சுதுமலை பிரசாரக் கூட்டத்தில் ரவிராஜ் சவால்

யாழ்ப்பாணம்,நவ.26

திருவிழாக் காலங்களில் கொட்டில் கடை நடத்தும் வியாபாரிகள் அல்லர் கூட்டணியினர்.

ஈ.பி.டி.பியினர்தான் ஸ்ரீதர் தியேட்டரில் இருந்துகொண்டு 'மொத்த வியாபாரம்' நடத்துகின்றனர்.

ஸ்ரீதர் தியேட்டரை விட்டு வெளியேறிவந்து எம்மைப்போல் அவர்களும் பகிரங்கமாகப் பிரசாரக் கூட்டங்களை நடத்தட்டும் பார்ப்போம்.

- இவ்வாறு சவால் விடுத்திருக்கின்றார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் வேட்பாளர் என்.ரவிராஜ்.

தமிழர் கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக் கூட்டம் கடந்த வெள்ளிபன்று சுதுமலை அம்மன் ஆலய வீதியில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரவிராஜ் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

**தேர்தல் களம் X**

தான் ஐக்கிய தேசியக் கட்சியின் அங்கத்தவர் இல்லை என்று வேட்பாளர் மகேஸ்வரன் கூறுகின்றார். இது சுத்தப்பொய். அங்கத்தவர் இல்லாத ஒருவரைக் கட்சிப் பட்டியலில் போடமுடியுமா என்பதைப் பொதுமக்களாகிய நீங்கள் யோசிக்க வேண்டும்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவாகவே நீங்கள் அளிக்கப்போகும் வாக்குகள் ஒவ்வொன்றும் இருக்கப்போகின்றன.

உலகிலே எந்தவொரு கட்சியும் செய்யாத செயலை ஈ.பி.டி.பி. செய்கிறது. தன் இனத்தையே அழிக்கும் நடவடிக்கைக்கு ஆயுதங்களைப் பெறுவதற்கு அது அரசுக்கு ஒத்துழைப்பு வழங்குகிறது. அதுமட்டுமன்றி உலக நாடுகள் கொடுக்கும் பணத்தை அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களை ஏமாற்றி வருகிறது ஈ.பி.டி.பி.- என்றார்.

**சிவாஜிலிங்கம் உரை**

வேட்பாளர்களில் ஒருவரும், ரெலோ அமைப்பின் முதல்வருமான க.சிவாஜிலிங்கம் தனது உரையில்:-

அண்மைக்காலமாக மொத்த வியாபாரியான மகேஸ்வரன் தமிழ் மக்களின் விடிவெள்ளிபோன்று காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றார். இதே நேரம் தான் ஓர் அமைச்சர் போன்றும் நடந்துகொள்ளவும் முற்படுகின்றார். அடுத்த அடிவருடியாக மகேஸ்வரன் வரவிரும்புகின்றார்.

1977ஆம் ஆண்டில் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை ஏந்திப் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இதற்குக் காரணமாக இருந்தவர்கள் ஐ.தே.கட்சியினரே ஆவர்.

**நூலகம் எரிப்பு**

தமிழ் மக்களின் கல்விச் செல்வமான பொது நூலகம் ஐ.தே. கட்சியினராலேயே தீயிட்டு எரிக்கப்பட்டது. 1983ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் வைத்து குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் உட்பட 57 இளைஞர்கள் படுகொலைக்குக் காரணமாக இருந்ததும் ஐ.தே. கட்சியே ஆகும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்தில் பல்வேறு ஒப்பந்தங்கள் தமிழ்க் கட்சியின் தலைவர்களினால் செய்யப்பட்டன. ஆனால் அவை எல்லாவற்றையும் கிழித்து எறிந்துவிட்டு எம் மக்கள் மீதும் சொத்துக்கள் மீதும் குண்டுகளை வீசி அழித்தார்கள்.

மட்டு., வன்னி மாவட்டங்களில் தலா நான்கு ஆசனங்களையும், திருமலை மாவட்டத்தில் இரண்டு ஆசனங்களையும், அம்பாறை மாவட்டத்திலும் கூட்டமைப்பினர் ஆசனங்களைக் கைப்பற்றியே தீருவர். யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பலகலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்களும் நினைத்தால் ஒன்பது ஆசனங்களையும் தமிழர் கூட்டமைப்பு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**தமிழ் மக்களை அழித்துவருகிறார் அம்மணி**

செம்மணிப் புகழ் அம்மணி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று நினைத்தது மிகவும் தவறானதாகும். அம்மணி தொடர்ச்சியாகத் தமிழ் மக்களை அழிக்கும் நடவடிக்கையிலேயே ஈடுபட்டுக்கொண்டு வருகின்றார்.

அவரின் ஆட்சியில்தான் தமிழ் இளைஞர்கள் நாளாந்தம் கைது செய்யப்படுகின்றார்கள். பெண்கள் கற்பழிப்புகளுக்கு உள்ளாகிவருகின்றார்கள். சந்திரிகாவுக்கு முகவராக ஈ.பி.டி.பி. கட்சியினர் இருக்கின்றனர். இத்தகையவர்களுக்காக தமிழ் மக்களாகிய நீங்கள் வாக்களிக்கப் போகின்றீர்களா?

மகேஸ்வரன் படுதோல்வி அடையப்போவது நிச்சயமாகும். நேர் கோட்டில் நான்கு கட்சிகளின் கூட்டமைப்பும் தமிழீழ விடுதலைப் புலிகளும் இருப்பதனால் இவரின் தோல்வி நிச்சயமானதாகும். மகேஸ்வரன் தமிழ் மக்களின் விடிவுக்காக இன்று ஏதோ எல்லாம் கூறிவருகின்றார். ஆனால் இன்றுவரை நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து கையுயர்த்தியுள்ளாரா?

உலக நாடுகளிடம் மன்றாடிப் பெற்ற பல்குழல் பீரங்கி மூலம் இன்று தென்மராட்சிப் பகுதி சுடுகாடாக்கப்பட்டுள்ளது. அங்குள்ள வீடுகள், கட்டடங்கள் யாவும் சிதைக்கப்பட்டுள்ளன. அவற்றை மீளக் கட்டுவதாக இருந்தால் முழுக்க அழிக்கப்பட்டே மீள நிர்மாணிக்கப்பட வேண்டியுள்ளது - என்றார்.

**ஆனந்தசங்கரி உரை**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரி தமது உரையில்:-

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பில சித்தார்த்தனின் புளொட் அமைப்பை ஏன் சேர்த்துக்கொள்ளவில்லை என்று கேட்கலாம். சித்தார்த்தனை யாரும் சேரவேண்டாம் என்று கூறவில்லை. ஆயுதங்களைக் கைவிட்டு அரசுடன் உள்ள தொடர்புகளை அறுத்துவிட்டு வந்து சேரும்படியே நாம் கூறினோம். அதற்கு அவர் உடன்பாடு காட்டவில்லை.

ரெலோ அமைப்பும் ஆயுதத்துடன் அரசில் இருந்தவர்கள்தானே என்று கூறலாம். ஆனால் அவர்களின் நடத்தை காரணமாக அரசே அவர்களிடம் இருந்த ஆயுதங்களைப் பறித்தெடுத்தது. அத்துடன் அவர்களும் ஆயுதங்களைக் கைவிட்டு அரசுடன் தொடர்புகள் எதுவுமின்றி இருந்தமையினால் எம்முடன் இணைந்துகொண்டார்கள்.

சித்தார்த்தன் இன்றும் அரசுடன் இணைந்துகொண்டு சம்பளம் பெற்றுக்கொண்டும் அரச இராணுவத்துடன் இணைந்து இயங்கிக்கொண்டும் இருக்கின்றமையினால் அவரைச் சேர்த்துக்கொள்ளவில்லை.

நாம் நாடாளுமன்றத்தின் கதிரைகளுக்கு ஆசைப்படுபவர்கள் அல்லர். சர்வஜன வாக்கெடுப்புமூலம் ஜே.ஆர். காலத்தில் நாடாளுமன்றத்தின் காலத்தை நீடிப்பதற்கு எதிர்த்துப் பிரசாரம் செய்தோம். 1983ஆம் ஆண்டில் நாடாளுமன்றப் பதவிகளை ராஜினாமாச் செய்தோம்.

**கூட்டுத் தொடரும்**

கூட்டணியுடன் இணைந்துள்ள நான்கு கட்சிகளின் கூட்டமைப்பும் ஒற்றுமையும் தொடர்ந்துகொண்டே இருக்கும் இதனை யாரும் முறியடித்து விட முடியாது.

மக்களாகிய நீங்கள் முழுமையான ஆதரவு எமக்குத் தருவீர்களேயானால் எமக்குப் 18முதல் 20 ஆசனங்கள்வரை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். எம்மைவிட்டுத் தென் பகுதியில் உள்ள கட்சிகள் எதுவும் அரசாங்கத்தை அமைக்க முடியாது. இதன் மூலம் டக்ளஸ் மாதிரி நீங்களும் மாறப்போகின்றீர்களா என்று நீங்கள் கேட்கலாம் .

எம்மையாரும் பணம், பொருள், பதவி கொடுத்து விலைக்கு வாங்கி விட முடியாது.

அமையப்போகும் அரசை நீங்கள் இதன்மூலம் ஆட்டிப் படைக்கக் கூடியதாக இருக்கும் - என்றார்.

இ.வசந்தகுமார் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் வேட்பாளர்கள் கா.சந்திரராசா, ச.ஐங்கரன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்.

(சு-7-36-185)

வீர வசனங்கள் பேசும் சூரர்கள் அல்லர் நாம்

# தமிழ்மக்களுக்கு செய்யக் கூடியவற்றையே நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்

## ஈ.பி.ஆர்.எல்.எவ். சுயேச்சைக்குழு வேட்பாளர் சுபத்திரன்

யாழ்ப்பாணம்,நவ.26

வீர வசனங்கள் பேசி மக்களை உணர்ச்சிவசப்படுத்தும் சூரர்கள் அல்லர் நாம். அதற்கு மாறாக தமிழ் மக்களுக்குச் செய்யக்கூடியவற்றை, சாத்தியமானவற்றை மட்டுமே நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம்.

- இவ்வாறு கூறுகின்றார் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் வரதர் அணி சுயேச்சைக் குழு முதன்மை வேட்பாளர் தம்பிராஜா சுபத்திரன் (றொபேட்).

இந்த சுயேச்சைக் குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் மானிப்பாய் தெங்கு பனம்பொருள் அபிவிருத்திச் சபையின் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுபத்திரன் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஈ.பி.ஆர்.எல்.எவ். தமிழ் மக்களின் தேசிய விடுதலை, தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, சமூக சமத்துவம் ஆகிய உயரிய இலட்சியங்களைத் தாங்கி உருவாக்கப்பட்ட பேரியக்கம். அது மட்டுமன்றி கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்திருக்கின்ற ஓர் அமைப்புமாகும்.

தற்போதைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றும் முகமாக பரந்தளவிலான அதிகாரப் பகிர்ந்தளிப்பும் தமிழ் மக்கள் மத்தியில் ஜனநாயகம் உறுதிப்படுத்துவதும் முக்கியமானதாகும்.

**மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்**

மக்களை உணர்ச்சிவசப்படுத்தி கற்பனைக் கோஷங்களை முன்வைத்து வாக்கு வேட்டையாடும் சக்திகள் பற்றி மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். நாடாளுமன்றத்துக்குச் செல்வதைத் தவிர மக்கள் சார்ந்த எந்த பொறுப்புணர்வுடன் கூடிய செயற்பாடும் இவர்களுக்குக் கிடையாது.

அபிவிருத்தி என்று செயற்படுபவர்கள் வெறுமனே தேர்தலை நோக்கமாகக் கொண்டு மக்களை வாக்குப் போடும் இயந்திரங்களாகக் கருதி



செயற்படுகிறார்கள். ஆனால் நாம் கற்பனைக் கதைகளை, பொய்களைக் கூறவில்லை. - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கண்ணோட்டம் பத்திரிகையின் ஆசிரியர் சிறிதரன் தமது உரையில்:-

தற்போது எமது அரசியல்வாதிகளின் பிரசாரத்தில் உண்மைக்கும், அவர்களின் உணர்ச்சியூட்டும் உரைகளுக்கிடையே என்ன சம்பந்தம் இருக்கின்றது?

புலிகள் உட்பட பல்வேறு இயக்கங்களிலிருந்து மரணித்துப்போன சாதாரண குடும்பங்களின் இளைஞர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நாளை

கார்த்திகை 12
செவ்வாய்க்கிழமை
திதி : துவாதசி
பின்னிரவு 1.49 வரை.
நட்சத்திரம் : ரேவதி
பிற்பகல் 3.02 வரை.
சுபநேரம் : 10.42 - 12.12
ராகுகாலம் : 3.12 - 4.42
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

நியாயத்தைக் கடைப்பிடிப்பவன் பொறாமையின் மத்தியிலும் முன்னேறுவான்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

கைச்சங்கிலி ஒன்று கச்சேரி லேன், நக்கா வீதி, இராசாவின் தோட்ட வீதிக்கும் பெருமாள் கோயில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 117, கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முக வரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (94927)

## விற்பனைக்கு

மூன்று மாதம் வளர்ச்சியடைந்த பிறீமா சிவப்பு, கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வம், 'மங்கள மாளிகை' மாயக்கை, சிறீகாந்தா தும்பளை வீதி, பருத்தித்துறை. (94903)

ஒருநாள் புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. பதிவு செய்த வர்களும் உடன் வந்து பெற்றுக் கொள்ளவும். தொடர்பு: லக்கி மத வடி ஒழுங்கை, திருநெல்வேலி. (94845)

## ஒரு காதலின் கதை

வானொலியில் 'வீம்பு' நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நாவல் "ஒரு காதலின் கதை" இலங்கைத் தமிழர் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தது. பல உண்மைச் சம்பவங்களும் வருகின்றன. (94931)

## சித்திரத் தேருக்கு அச்சுப்பார் கோர்க்கும் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,நவ.26

கல்வியங்காடு அருள்மிகு இலங்கை நாயகி மனோன்மணி அம்பாள் ஆலயத்துக்கென புதிதாக அமைக்கப்படவிருக்கும் சித்திரத் தேருக்கான அச்சுப்பார் கோர்க்கும் நிகழ்வு இன்று பற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

சித்திரத்தேரினை கலாபூஷணம் சு.இராசரெத்தினம் ஆசாரியார் அமைக்கவுள்ளார்.

(க-7)

## 62 ஆயிரம் தொலைபேசி இணைப்புக்களை வழங்க ரெலிகொம் திட்டம்

கொழும்பு,நவ.26

நாடு முழுவதும் அடுத்த ஆண்டு (2002) 62 ஆயிரத்து 500 தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதற்கான திட்டத்தை ரெலிகொம் நிறுவனம் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அந்த நிறுவனம் 75 கோடி ரூபாவைச் செலவு செய்யவுள்ளது எனவும், தூர இடங்களிலுள்ள கிராமங்களுக்கு அதிக தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதுடன் அப்பகுதிகளிலுள்ள தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையங்களின் ஆற்றல் அதிகரிக்கப்படும் எனவும் ரெலிகொம் நிறுவனம் அறிவித்துள்ளது.

(க)


# எமது இதய பூர்வமான நன்றிகளும் பாராட்டுக்களும்

**நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலனசபை**

சங்கிலி மன்னனால் ஸ்தாபிக்கப்பட்டு, பூசிக்கப்பட்ட பழம் பெரும் புராதன ஆலயமாகிய எமது ஆலய புனரமைப்புக்கென முதற்கட்டமாக ரூபா 10,00,000 (பத்து லட்சத்தை) ஒதுக்கி அதில் ரூபா 5,00,000/=ஐ எமக்குத் தந்துதவிய



*வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் மொழி விவகாரங்கள் அமுலாக்கல் அமைச்சரும், இந்து கலாசார அமைச்சருமான*

மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**

*அவர்களுக்கும்*



*முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பியின் பிரதம அமைப்பாளருமாகிய*

**உயர்திரு. K.V.குகேந்திரன் (ஜெகன்)**

*அவர்களுக்கும்*



*எமது நல்லூர் பிரதேச சபைத் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமாகிய*

**உயர்திரு. க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**

*அவர்களுக்கும்*

எமது மனப்பூர்வமான நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றோம்.

*வாழ்த்துவோர்:*

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபால்ன சபையினர்,
நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய இந்து இளைஞர் மன்றத்தினர்,
நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய வழிபடுவோர் சங்கத்தினர்.

(94934)



# முதலாம் ஆண்டு நினைவு



மலர்வு 25 - 09 - 1986

உதிர்வு 07 - 12 - 2000

## திவ்யா விக்னேஸ்வரன்

**திதி: 26 - 11 - 2001**

கூடுதான் எம்மை விட்டுப் பிரிந்தது! தேடுகிறோம் உன்னை இன்று! காணவில்லை உன் கூட்டை - ஆடுதம்மா உன் நினைவு எந்நாளும்!

*பாசம் என்றுன்னை நினைத்தோம்*
*பறந்து சென்றுவிட்டாய் இறைவனிடம்!*
*தேடுகின்றோம் உன் உருவை!*
*வருவாயோ அல்ல வருவோமோ?*
*ஓராண்டு சென்றாலும் ஆறாது உன் நினைவு!*
*தேடுவோமா உன் உயிரை?*
*இறைவன் எடுத்துவிட்டான்*
*பற்றுடன் வாழ பிரார்த்திக்கின்றோம்!*

பிரிவால் துயருறும்:
**க.விக்னேஸ்வரன் குடும்பத்தினர்**

*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.*

(C/19457)



# நெஞ்சை விட்டகலா முதலாம் ஆண்டு நினைவலைகள்



திருமதி

**பரமேஸ்வரி இராஜசிவகுமார் (திரவியம்)**

அன்னையின் மடியில் 29★03★1953

அம்பாள் திருவடியில் 07★12★2001

**திதி: 26-11-2001**

*அன்புக்கும் பண்புக்கும் இருப்பிடமாய் - இருந்த*
*எங்கள் குடும்பக் குலவிளக்கே! திரவியமே!*
*எங்களுக்குத் துன்பத்தையும், துயரத்தையும்*
*தந்துவிட்டுப் போய் விட்டீர்களே!*
*உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கே? புன் முறுவல் எங்கே?*
*கனிவான பேச்செங்கே? இனிய பார்வை எங்கே?*
*ஆண்டொன் றென்ன ஆயிரம் தான் - ஆனாலும்*
*அழியாது எம் பாசம்! ஆறாது எம் சோகம்!!*
*என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*அ.கருணாமூர்த்தி,*
*மூத்த விநாயகர்*
*கோயிலடி,*
*ஆனைக்கோட்டை.*

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், மகள், தந்தை, தாய், சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள், பேறாமக்கள், மருமக்கள், உறவினர்கள்.

(C/19459)





# தொண்டு - தியாகம் - நேர்மை

தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

**திரு.சி.சிவமகாராசா** அவர்களை ஆதரிப்போம்

05.12.2001 இல. 14



(94858)





# பொதுத் தேர்தல் - 2001 யாழ்.மாவட்டம்

என்றும் உங்கள் சேவையில்

உங்கள் வாக்கு யாழ்.மாவட்டத் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்

**திரு.கா.சந்திரராசா (SLAS)**

அவர்களுக்கே!

*(ஓய்வுபெற்ற பிரதேச செயலர் நெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, நிர்வாக அதிகாரி (A.O.) யாழ்.கல்வித் திணைக்களம்)*

7

- வட்டுக்கோட்டைத் தொகுதி வாழ் மக்கள் -

(94855)

# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## யாழ். மாவட்டம்

## முஸ்லிம் காங்கிரஸின் ஒரேயொரு தமிழ் வேட்பாளர்

## ஞானசுந்தரம் ஆனந்தகுமார்



அணையாத
அகல் விளக்காய்
துலங்குகின்ற
மண்ணின் மைந்தர்களே!
மாவீரர் தீபங்களே!
உங்கள் கனவுகள்
மெய்ப்படவும்
தமிழர் உரிமைப் போர்
வாகை சூடிடவும்
இத்தியாகத் திருநாளில்
உறுதி கொண்டிடுவோம்!
தாய் மண் மீட்சிபெற
உழைத்திடுவோம்.

**ஞா. ஆனந்தகுமார்**
**(கொக்குவில் இந்துவின் மைந்தன்)**



| | |
|---|---|
| | X |
| 4 | X |

(C/19441)





# நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

## சேனாதிராசாவே தமிழ் மக்களின் தெரிவு!

பேரினவாதமும், பேரினவாத அரசும், அதன் இராணுவமுமே தமிழ்த் தேசிய இனத்தின் பொது எதிரி. இவற்றுக்கு எதிராக ஒன்றுபடுவோம்.

பேரினவாத அரசுகளுக்கு எதிராக - அவற்றை ஆட்சியில் தூக்கி வைத்திருக்கும் பேரினவாத அரசுகளுக்கு எதிராக - தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழ்மகன்

**மாவை சோ.சேனாதிராசா** அவர்களே தமிழ் மக்களின் தெரிவு!

| | | | |
|---|---|---|---|
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | X | 12 |

(C/19464)

# 91ஆவது பிறந்த நாள் வாழ்த்து
## 26-11-2001



## திரு.க.முருகேசு
**(ஓய்வு பெற்ற அதிபர்)**

அவர்கள் இன்று 91ஆவது பிறந்தநாளைத் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை மனைவி, மக்கள், மருமக்கள், பெறாமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் அனைவரும் அல்வாய் அரசடிப்பிள்ளையார் துணையுடன் மகிழ்வோடு வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

*'ஆனந்த கானம்'*
*ஆவரங்கால், புத்தூர்.* (94915) *- குடும்பத்தினர்*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.க.உ.தயகுமாரன்**
*(கிளி/சோரன்பற்று கனேசா வித்தியாலயம்)*

அவர்கள் இலங்கை அதிபர் சேவைக்கு உயர்வு பெற்றமையைப் பாராட்டுவதுடன், அவர் தமது சேவையில் மேன்மேலும் உயர்வு பெற வாழ்த்துகின்றோம்.

சக ஆசிரிய நண்பர்கள்,
பளை.
(94842)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## உயர்திரு F.X. அன்ரன்
*(யாழ்/மிருசுவில் றோ. க. த. க. பாடசாலை)*

எமது பாடசாலை அதிபர் F.X.அன்ரன் (அதிபர் தரம் 2 II க்கு) பதவி உயர்வுபெற்றமையைப் பாராட்டுவதுடன் அவர்களுடைய சேவை மேன் மேலும் சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

மிருசுவில் றோ.க.த.க.பா. ஆசிரியர்கள்,
தற்போது அப்பாடசாலை இணைந்த ஆசிரியர்கள், மாணவர்கள்.

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 01 . 1915



மறைவு 30 . 11 . 1998

திருமதி
## வள்ளியம்மை ராஜா
**திதி:26.11.2001**

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தோப்பு மாணிக்கப் பிள்ளையாரை பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
*சிவகுருநாதர் ஒழுங்கை,* பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
*நீராவியடி.* உறவினர்கள்.

## 'ஞான சவுந்தரி' இசை நாடகம்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் அபிவிருத்திக்காக பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் எதிர்வரும் 30ஆம் திகதி 'ஞான சவுந்தரி' என்ற இசைநாடகம பாடசாலை மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

மாணவர்களுக்காக விசேடமாக காலை 10.30 மணிக்கும் பொதுமக்களுக்காக பிற்பகல் 2.30 மணிக்கும் மேடையேற்றப்படவுள்ள இக்காட்சிகளில் பங்குபற்றி பாடசாலையின் அபிவிருத்திக்கு உதவுமாறு பழைய மாணவர் சங்கம் கேட்டுள்ளது. (க-6)

## நீர்வேலியில் நீரிழிவு குறித்து கருத்தரங்கு

இணுவில் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 9 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நீரிழிவு தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் சோ.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் லயன் டாக்டர் வி.தியாகராசா மற்றும் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் ஆகியோர் கருத்துரையாற்றவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு இணுவில் லயன்ஸ் கழகம் கேட்டுள்ளது. (க-6)

## வடமராட்சியில் பிரசார நடவடிக்கை

தென்மராட்சி,நவ.26

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (வரதர் அணி) தேர்தல் பிரசாரம் கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி, தென்மராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் நடைபெற்றது.

நூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்களுடன் கட்சியின் முதன்மை வேட்பாளர் த.சுபத்திரனும் பிரசார நடவடிகையில் கலந்துகொண்டார். (க-117)

## விபத்தில் மாணவிகள் மூவர் காயம்

படையினரின் மோட்டார் சைக்கிளுடன் (பீல்ட் பைக்) ஏற்பட்ட விபத்தில் மூன்று மாணவிகள் காயமடைந்தனர். இவர்கள் மூவரும் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று முன்தினம் 12.15 மணியளவில் யாழ்.நீதிமன்றச் சந்தியில் (கன்னியர்மடம் வீதி - சென் மரியாள் வீதி) நடைபெற்ற இச்சம்பவத்தில் சென் மரியாள் வித்தியாலயத்தில் கற்கும் மாணவிகளே படுகாயமடைந்தனர்.

பாடசாலையில் பரீட்சை எழுதி விட்டு வீட்டுக்குச் சைக்கிளில் சென்ற இரு மாணவியரும், நடந்து சென்ற மற்றொரு மாணவியுமே இந்த விபத்தில் காயமடைந்தனர்.

சைக்கிளில் வந்த மாணவிகளில ஒருவரின் முதுகில் மோட்டார் சைக்கிள் ஏறி காயமேற்பட்டுள்ளது. சைக்கிளில் சென்ற மற்றைய மாணவியின் வலது காலில் காயம் ஏற்பட்டுள்ளது. நடந்து சென்றுகொண்டிருந்த மாணவிக்கு வலது தோள்மூட்டு மற்றும் இடது கை ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுள்ளது. (ம-10-ரி-15)

# நன்றியுடன் வாழ்த்துகின்றோம்
**மானிப்பாய் மகளிர் கல்லூரியின்**

தேவையையுணர்ந்து பூர்த்தியடையாத வெள்ளிவிழாக் கட்டடத்தை நிறைவு செய்து முடிப்பதற்கு முதற்கட்டமாக ரூபா 10 லட்சத்தை ஒதுக்கித்தந்து வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டுவரும் இவ்வேளையில்,



ஈகையே சிந்தையெனக் கொண்ட
மாண்புமிகு அமைச்சர்
**K.N.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களையும்

தம்மினம் தன்னிறைவு பெற்றிட
தளராது உழைக்கும் கௌரவ
**K.V.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களையும்





சாத்வீக செயல்வீரர் உயர்திரு
**அன்ரன்**
**வெலிச்சோர் ஜோன்சன்**
அவர்களையும்

*மானிப்பாய் மகளிர் அன்னையின்*
*சார்பில் சகல வளமும் பெற வேண்டுமென மனம்*
*நிறையப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.*

யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, மானிப்பாய். - பாடசாலைச் சமூகம்
(94824)

# *பாராட்டி வாழ்த்துகின்றோம்*



**கிளி/மாசார் அ.த.க.பாடசாலை அதிபர்**
**திரு.த.அம்பலவாணர்**
(B.A., Dip. in Edu., SLPS 2-II)

எமது பாடசாலையின் **அதிபர் திரு.த.அம்பலவாணர் அவர்கள்** 04.08.2000 தொடக்கம் இலங்கை அதிபர் சேவையின் அதிபர் தரம் 2-IIக்கு பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரை மனமுவந்து பாராட்டுவதுடன் அவர் எதிர்காலத்தில் சிறப்பான சேவையாற்றி மேன்மேலும் பல உயர்வுகள் பெற்றிட இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர்கள், மாணவர்கள்.
(94822) *கிளி/மாசார் அ.த.க.பாடசாலை,பளை.*

# நெஞ்சகலா நினைவலைகள்...

**முதலாம் ஆண்டு**

பிறப்பு 21 . 10 . 1931



இறப்பு 26 . 11 . 2000

## செபஸ்ரியாம்பிள்ளை லில்லி மாகிறேற் *(ருக்மணி)*

*"ஆண்டவரே ஆழ்ந்த துயரத்தில் இருக்கும் நான் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்".*
*(தி.பா. 130.1)*

**18ஆம் ஆண்டு**

பிறப்பு 07 . 05 . 1958



இறப்பு 28 . 12 . 1983

## செபஸ்ரியாம்பிள்ளை அனஸ்லீன்

*"ஆண்டவரே என் மன்றாட்டைக் கேட்டருளும் என் அபயக்குரல் உம்மிடம் வருவதாக".*
*(தி.பா. 102.1)*

*அன்பான இறைவா!*
*இரக்கம் காட்டுவதும் பொறுத்தல் அளிப்பதும் உமது இயல்பாமே! உமது திருவுளப்படி தேவரீர் மண்ணிலிருந்து விண்ணுக்கு அழைத்துக்கொண்ட*

செபஸ்ரியாம்பிள்ளை லில்லி மாகிறேற் (ருக்மணி),
செபஸ்ரியாம்பிள்ளை அனஸ்லீன்

*ஆகியவர்களுடைய ஆன்மாவுக்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா மோட்சப் பேரின்பத்தையும் அளித்தருளும்!*

*16, சென்.ஜேம்ஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

இவர்களது பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.




அச்சுவேலி மக்கள் வங்கிக் கிளையின் ஆரம்ப வைபவம் கடந்தவாரம் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

மக்கள் வங்கிகளின் உதவிப் பொது முகாமையாளர் ரீ.இளம்பிறைநாதன், பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர், மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், கிளையின் முகாமையாளர் மு.சிவநேசன், அச்சுவேலிப் பகுதி இராணுவ சிவில் நிர்வாக அதிகாரி ஆகியோர் அமர்ந்துள்ளனர். *(படம்: பொ. இராஜேஸ்வரன்)*

# 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்



தோற்றம்
10
-
04
-
1941

மறைவு
27
-
10
-
2001

அமரத்துவ அன்னை

## சிவஞானபிள்ளை மகேஸ்வரி

**அணைந்தும் அணையாத எம் அன்புத் தெய்வமே!**
**மாதம் ஒன்றுசென்றும் உம் நினைவலைகள் மாறவில்லையே?**
**அன்பிற்கோர் இருப்பிடமாய் பண்புக்கோர் பொக்கிஷமாய்**
**குடும்பத்தோடும் உற்றார், உறவினரோடும் வாழந்து காட்டிய**
**அன்னையே! காலமெல்லாம் உன் நினைவோடு வாழ்வோம் அம்மா.**

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவையொட்டி எமது இல்லம் வந்து அஞ்சலியும் ஆறுதலும் செலுத்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

*சுருவில்,*
*ஊர்காவற்றுறை.*
(94921)
- குடும்பத்தினர்.

## 32 முறைப்பாடுகள் வவுனியா மனித உரிமை அலுவலகத்தில் பதிவு

வவுனியா,நவ.26

வவுனியா மாவட்டத்தில் இந்த மாதத்தில் மட்டும் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் காணாமற்போனவர்கள் தொடர்பான 32 முறைப்பாடுகள மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

இந்த 32 முறைப்பாடுகளில் 6 முறைப்பாடுகள் காணாமற்போனோர் தொடர்பானவையாகும்.

பூந்தோட்டத்தைச் சேர்ந்த எஸ். சந்திரன் (வயது-19), கோபால் தெய்வேந்திரன் (வயது-20), சிவராஜா பாஸ்கரன் (வயது-18), வைத்திலிங்கம் சசிகரன் (வயது-20) ஆகிய 4 இளைஞர்களையும் மற்றும் இரு யுவதிகளையுமே காணவில்லை என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(க-6)

## இன்று பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,நவ.26

யாழ்ப்பாணம் நீராவியடி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறவுள்ளது.

(க-6)

## வேட்பாளர் தடுத்துவைப்பு

திருகோணமலை,நவ.26

திருகோணமலை மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் நவரெட்ணராஜா வரதன் கடந்த வெள்ளிக்கிழமை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர்ப் பிரதேசத்துக்குச் சென்ற சமயம் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்.

'குளக்கோட்டன் படை' என்ற பெயரில் திருகோணமலைப் பகுதியில் அண்மையில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தை விமர்சித்து கடுந்தொனியிலான அறிக்கை ஒன்றை இவர் வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-145)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



*யா/கைதடி குருசாமி வித்தியாலய அதிபர்*

**திரு.கந்தவனம் அரியதாஸ் (Spl. Trd. (Gen.))**

அவர்கள் அதிபர் சேவை தரம் 2 IIஇற்கு பதவி உயர்வு பெற்றுள்ளதையிட்டு அவரை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**- ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள்.**

யா/கைதடி குருசாமி
வித்தியாலயம்.
(94911)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
14
-
03
-
1939

மறைவு
27
-
11
-
1999

## அமரர் தோமஸ் றிச்சேட்

அன்னாரின் நினைவுதினமாகிய நாளை (27-11-2001) செவ்வாய்க்கிழமை காலை திருநெல்வேலியிலுள்ள வேதாந்த மடத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும்.

இந்த நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

மனைவி : யோகேஸ்வரி (ராசாத்தி)
பிள்ளைகள்: றாயன், றாயூ, யூட்டா, ரஜனி, றெனா - (பிரான்ஸ்)
மருமக்கள் : சாந்தி, யெஸ்மின், சிராணி, உசா, உதயன்,
மற்றும் பேரப்பிள்ளைகள்.

தகவல்:
சு.விஜயகாந்தன்,
*குளங்கரை லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*
(94914)

# உன் கண்ணில் நீர்வடிந்தால்?



39 வருடம் சளி அடைப்பிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைபெற்றவர்



10 வருட தெளிவற்ற பார்வையிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைபெற்றவர்.



10 வருட தலைவலியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலைபெற்றவர்.



15 வருடம் உடைந்த காலினால் நடக்கமுடியாது வேதனைப்பட்டவர் ஜெபத்தின்மூலம் சுகம்பெற்றவர்.

**பலவருடம் நடந்த சமூக துரோகச் செயல் காட்டிக்கொடுக்கின்ற சுயநல இலாபங்களும் யாழ். மண்ணிலே ஓர் இரத்தக்காயங்களாக மாறிவிட்டன. ஒரு சிறு குழந்தைக்கு விளக்கின் நெருப்போடு கை வைப்பது விளையாட்டாக இருக்கும். ஆனால் அது சூடுபட்ட காயமாக மாறிப் பலநாள்கள் புண்ணாக மாறியபின்தான் வேதனை தெரியும். அந்த வேதனை குழந்தையைவிட தாய்க்கே அதிகமான இரு துயரமாக இருக்கும். இச் சூழ்நிலையிலே யாழ்ப்பாண வளர்ச்சிக்காக இரகசியமாகப் பலரும் பொறுப்பில்லாமல் நடந்ததன் நிமித்தம் மக்கள் ஆண்டியாக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் மக்களை ஆண்டியாக்கவே சில ஏகாதிபத்தியங்கள் விரும்புகின்றன. மக்களின் கண்ணீரைக் குடித்துக்கொண்டிருக்கின்றன. இப்படியான சூழ்நிலை நிலவும் நேரத்திலே கடவுள் எங்கே? கடவுள் ஒரு மதமா? ஆங்கிலேயருடைய கடவுளா? கடவுள் மனிதனின் கற்பனைப் பொருளா? மனிதனின் கண்ணீரைத் தேவன் கண்டு வேதனை அடைகின்றார். ஆனாலும் மனிதன் தூரமாய் இருப்பதனால் அவரால் கண்ணீரைத் துடைக்க முடியவில்லை. மனிதன் மதத்தோடு மட்டும் நிற்கின்றான். அதற்கு மேல் சிந்திக்க நேரமில்லை. மனிதனுடைய ஆறாத் துயரைக் கண்டு அங்கலாய்க்கின்றார். மனிதன் கடவுளுடைய மாண்புமிகு மாட்சிமையைக் காணமுடியாமல் இருக்கிறான். எனினும் தான் படைத்த மனிதன் அழிந்து போகக்கூடாது என்று மனதுருகி இரங்குகின்றார். அந்த இரக்கத்தைக் காண ஒரு சந்தர்ப்பம் வேண்டாமா? இதோ இயேசு ஜீவிக்கிறார். பணிக்கூடாகத் தன் ஆத்மீக சுவிசேஷ ஆராதனை நடத்துகின்றது. வாருங்கள்! இறை அருள் பெறுங்கள்!!**

வாருங்கள் உங்கள் வாழ்க்கையில் கண்ணீர், நோய், துன்பம், பிசாசின்பிடி இப்படியான எல்லாவிதமான பிரச்சினைகளிலிருந்தும் விடுதலைபெறலாம். ஒருமுறை கடவுளிடம் கையேந்திப் பார்ப்போம்!

**செய்தி:- சகோ.செ.இராஜேந்திரம் அவர்கள்**

**காலம், இடம்:-2001 நவம்பர் மாதம் 27, 28ஆம் திகதிகளில் (பிற்பகல் 2.00 மணி) பருத்தித்துறை தெரு மூடி மடத்துக்கு அருகிலுள்ள திக்கமுனை விளையாட்டு மைதானத்திலும்,**

**நவம்பர் மாதம் 29ஆம் திகதிமுதல் டிசெம்பர் 2ஆம் திகதிவரையும் துரையப்பா ஸ்ரேடியம் (உள்ளரங்கு யாழ்ப்பாணத்திலும்) பிற்பகல் 2 மணிமுதல் 5.30 மணிவரை நடைபெறும்.**

**பிரவேசம் இலவசம்.......பிரவேசம் இலவசம்**



3வருடம் காது கேட்காமல் இருந்தவர் ஜெபத்தின்மூலம் சுகம்பெற்றார்.



5வருடம் வாயில் புண் ஜெபத்தின்மூலம் விடுதலை பெற்றார்.



30 வருட மூட்டு வலியிலிருந்து ஜெபத்தினால் விடுதலைபெற்றவர்.



4வருடமாக அசுத்தாவியின் பிடியில் இருந்தவர் ஜெபத்தின்மூலம் சுகம்பெற்றார்.

தொடர்பு: இயேசு ஜீவிக்கிறார், 401, அளுத்மாவத்தை வீதி, கொழும்பு – 15
த.பெ.இல . 1044, கொழும்பு, T.P. : 522608

(94917)



# தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரத்தின் உள்ளத்திலிருந்து....

**என் அன்புக்குரிய தமிழ் மக்களே!**

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடந்தேறிய நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பெருமளவில் உங்கள் ஆதரவை நல்கும்படி வேண்டுகோள் விடுத்திருந்தேன். எனது அன்பு வேண்டுகோளை ஏற்று அநேகர் செயற்பட்டீர்கள் என்பதை நான் அறிவேன். 1977ஆம் ஆண்டு அமோக வெற்றியீட்டித் தந்த நீங்கள் 23 ஆண்டுகளின் பின் இக்கட்டான சூழ்நிலையிலும், அரசின் முழு ஆதரவுடன் இயங்கிவந்த ஒரு முன்னாள் ஆயுதக் குழுவின் அடாவடித்தனங்களையும் எதிர்த்து, இலட்சியப் பற்றுடன் செயற்பட்டு வந்த எமது கட்சியாகிய தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு பெரும் ஆதரவு வழங்கி, மூன்று நாடாளுமன்ற ஸ்தானங்களையும் கைப்பற்ற உதவினீர்கள். அன்றைய சூழ்நிலையில் சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடைபெறாத ஒரு தேர்தலில் நீங்கள் பெற்றுக்கொடுத்த 'மூன்று' ஆசனங்களை பெரும் வெற்றியாக உலகமே பாராட்டியது. அதற்காக உங்களுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்ற முறையில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வெற்றியைப் பெற முதன்மை வேட்பாளராகத் தலைமை தாங்கி செயற்பட்ட எமது கட்சியின் சிரேஷ்ட உப தலைவராகிய திரு. வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்களுக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிப்பதோடு அவருடன் ஒன்றிணைந்து செயற்பட்ட திருவாளர்கள் மாவை சேனாதிராசா, சிவமகாராசா, இரவிராஜ், அரவிந்தன், முத்துலிங்கம், சின்னத்துரை, சேவியர் ஆகிய கட்சி உறுப்பினர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டவன்.

எல்லாவற்றுக்கும் மேலாக பல சிரமத்தின் மத்தியிலும் நம் வெற்றிக்கு உழைத்த பொதுமக்களாகிய உங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

திரு. வீரசிங்கம் ஆனந்தசங்கரி அவர்களை நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக நான் அறிவேன். அரசியலில் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் தீவிரமாக இயங்கிவந்த அவர், வெறும் அனுபவசாலி மட்டுமல்ல, துணிச்சலும் மிக்கவர்; செயல் வீரர். நீண்டகாலமாக நான் உடல் குன்றியிருந்த வேளை கட்சியின் நடவடிக்கைகளை அவர் பெருமளவில் தானே சுமந்து செயற்பட்டமை அனைவரும் அறிந்ததே!

கடந்த ஓராண்டு காலமாக நாடாளுமன்றக் குழுவின் தலைவராக திரு. ஆனந்தசங்கரி செயற்பட்ட வேளை, அவர் ஆற்றிய துணிச்சல் மிக்க உரைகள் பலவற்றைப் படித்து பெருமைப்பட்டதுண்டு. இன்றைய காலகட்டத்தில் அரச பயங்கரவாதம் தலைதூக்கி நின்றவேளையிலும் துணிச்சலாக உரையாற்றிய பெருமை அவரையே சாரும். ஒரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில் தனது உரையின்போது "ஆனையிறவு பிடிபட்ட வேளை 35ஆயிரம் இராணுவத்தினரைக் காப்பாற்றித் தாருங்கள் என்று அயல் நாடுகளை மண்டியிட்டு நின்றது போன்று மீண்டும் அப்பேற்பட்ட நிலைமை ஏற்படாது என எண்ணி இறுமாப்புக் கொள்ளக் கூடாது" என்று அவர் பேசியதும் வேறு ஓர் சந்தர்ப்பத்தில் "மூன்று மாத விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தத்தின் போது ஒரு கிலோமீற்றர்தன்னும் முன்னேற முடியாத ஸ்ரீலங்கா இராணுவம் பத்து ஆண்டுகள் சென்றாலும் பளையைப் பிடிக்க முடியாது. ஆனையிறவை கைப்பற்றுவது பகற்கனவு" என்று அவர் வாதாடியதும் அவரின் துணிச்சலுக்கு எடுத்துக்காட்டாகும்.

இன்றைய காலகட்டத்தில் அரசின் சதித் திட்டத்தை முறியடிக்க அரசுக்கு விரோதமாக இயங்கும் தமிழ்க்கட்சிகள் ஒரே அணியில் சேரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக கடந்த கால சகல கசப்பான சம்பவங்களையும் மறந்து, தமிழ்மக்களின் ஏகோபித்த வேண்டுகோளை ஏற்று, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஷ் அணி) ஆகியவை ஒன்றிணைந்து 'தமிழர் விடுதலைக் கூட்டணி'யின் சின்னமாம் 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிடுகின்றன. இதற்கு எனது பூரண சம்மதமும், ஆசியும் உண்டு.

இக்காலகட்டத்திலேனும் உங்களுடன் சேர்ந்து செயற்பட முடியாமைக்கு வருந்துகின்றேன். ஆனால் விரைவில் அப்பாக்கியம் கிட்டும் என நம்புகின்றேன். எனது கடமையை எம்மக்களுக்கு எனது இறுதி நாள்களில் செய்யத் துடிக்கின்றேன்.



யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, வன்னிக்குரிய பொருளாதாரத் தடைகளை அகற்றி, புலிகள் மீதான தடையை நீக்கி, நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளுடன் அரசு பேசவேண்டும் என்ற புதிய நிலைப்பாடு வரவேற்கத்தக்கது மட்டுமன்றி, தமிழ் மக்களாகிய உங்கள் அனைவரின் ஏகோபித்த ஆதரவையும் பெறவேண்டிய விடயமுமாகின்றது.

விடுதலைப் புலிகளின் நம்பிக்கைக்குரிய - நீண்டகாலமாக விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கு மத்தியஸ்தராகச் செயற்பட்டவரான - நோர்வே நாட்டுப் பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் என்பது அனைவரும் அறிந்ததே. அத்தகைய ஒரு முக்கியமான பிரமுகரை நாடாளுமன்றத்தில் தனது உரையில் 'சிஹல உறுமய' கட்சியின் ஒரே உறுப்பினர் காரசாரமாகவும் மிகவும் கீழ்த்தனமாகவும் விமர்சித்தும் அரசு முன்வரிசை அமைச்சர்களோ, எதிர்க்கட்சியினரோ யாவரும் மௌனம் சாதித்த அவ்வேளையில், திரு. ஆனந்தசங்கரி மட்டுமே தனது உரையில் 'சிஹல உறுமய' நாடாளுமன்ற உறுப்பினரை கண்டித்துப் பேசி, எரிக் சொல்ஹெய்ம் அவர்களுக்கு நாட்டு மக்கள் சார்பில் மன்னிப்புக் கேட்பதாகக் கூறினார். திரு. ஆனந்தசங்கரி அவர்களின் இச்செயல் பல்வேறு நாட்டுத் தூதுவர்களாலும் புகழப்பட்டது மட்டுமன்றி தமிழர் விடுதலைக் கூட்டணியின் மதிப்பையும் பிற நாடுகளில் உயர்த்தியது.

துணிச்சல் மிகு தலைவர்கள் இன்று நாடாளுமன்றத்தில் இல்லாததை ஈடுசெய்வதுபோல் செயற்படும் திரு. வீ. ஆனந்தசங்கரி இன்றைய காலகட்டத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கவேண்டியது மிக மிக அவசியமாகும். அவரின் வெற்றியை உறுதி செய்வதும் தமிழ் மக்களாகிய உங்களது கடமையாகும்.

நான் மீண்டும் உங்கள் மத்தியில் சேவை செய்யும் அந்த நாளை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றேன்.

எமது இலட்சியப் பாதையில் நின்று விலகாமல் எமது கட்சித் தலைவர்கள் செயற்படுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**அன்பு வாக்காளப் பெருமக்களே!**

*எதிர்வரும் பொதுத் தேர்தல் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அதிமுக்கியமானது மட்டுமன்றி நாம் சிந்தித்து செயலாற்ற வேண்டியதுமாகும். நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் உண்மையாக இனத்தின் நலன்கருதி உழைக்கக்கூடியவர்களாக அமையவேண்டும்.*

*எனவே கொழும்பு மாவட்டம் உட்பட வடக்கு - கிழக்கு மாவட்டங்களிலும் 'உதயசூரியன்' சின்னத்தில் போட்டியிடும் எமது வேட்பாளர்களுக்கு பூரண ஆதரவு வழங்கி வெற்றிபெறச் செய்யுமாறு உங்கள் அனைவரையும் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.*

நன்றி.

அன்புடன்

மு.சிவசிதம்பரம்
10.11.2001

காந்தி நகர்,
அடையாறு,
சென்னை.

## தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதன்மை வேட்பாளர் வீ.ஆனந்தசங்கரியின் வெற்றியை உறுதிப்படுத்துவோம்

## தமிழர் விடுதலைக் கூட்டணி X 3

(C/19465)

# தமிழரைச் சூழ்ந்த பேரினவாதப் பேரிருளை நீக்கவந்த பிரபாகரன் என்னும் பேரொளி!

மா.க.ஈழவேந்தன்
பொதுச் செயலாளர்,
தமிழீழ விடுதலை அணி.

சென்ற ஆண்டு தமிழீழத் தலைவர் மேதகு பிரபாகரனின 46 ஆவது பிறந்தநாள் தமிழக மண்ணில கொண்டாடப்பட்டது. அவரின் பிறந்த நாளை ஒட்டி நான் வரைந்த கட்டுரை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் வைகோவை ஆசிரியராகக் கொண்டுள்ள "சங்கொலி" இதழில் சிறப்புக் கட்டுரையாக வெளிவந்தது. அவர் நிகழ்த்திய மாவீரர் உரையை வரவேற்று நான் விடுத்த அறிக்கை தமிழகச் செய்தியிதழ்கள் அனைத்திலும் வெளிவந்தன. அத்துடன் லண்டன் ஐ.பி.சி நிறுவனமும் எனது அறிக்கைக்கு முதன்மை கொடுத்து ஒலி பரப்பியது. தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் தலைவராக விளங்கும் 'எம் தம்பி' பிரபாகரனை நான் வாழ்த்தி கட்டுரை வரைந்ததோடு அவரது மாவீரர் உரையை வரவேற்று 'பாரதத் தாயின் அரவணைப்பில் தமிழீழம் மலரும்' என்று அவ்வறிக்கையில் நான் குறிப்பிட்டிருந்தேன். தவிர்க்க முடியாத நிலையில் சில கசப்பான நிகழ்ச்சிகள் இந்திய அரசுக்கும் ஈழத் தமிழ்மக்களுக்கும் ஏற்பட்டபோதும் - கூடாத கனவாகக் கருதப்பட்டு மறக்கப்பட்டது. எம்மிடையே ஒரு பிரிக்க முடியாத பிணைப்பு - ஒரு தொப்பூழ் கொடி உறவும் உண்டு என்பதை வலியுறுத்தி ஈழத்தமிழருக்கும், இந்தியாவுக்குமிடையே மொழியியல், பணபாட்டியியல், சமயவியல், வாழ்வியல் அனைத்திலும் ஒன்றியதன்மை உண்டு என்பதை உலகறியும் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இந்த அடிப்படை உண்மையை நினைவு கொண்டே "பிரபாகரன் இந்தியாவின் உற்ற நண்பன், எனவே பாரதத் தாயின் அரவணைப்பில் தமிழீழம் மலர வேண்டும்" என்று என் அறிக்கையில் வலியுறுத்தினேன்.

### பக்கத்திலுள்ள பாசமுள்ள நாடு பாரதம்

"இந்தியத் துணைக் கண்டம் எமக்குப் பக்கத்திலுள்ளது. இந்துமா பெருங்கடலில் அது வகிக்கும் முக்கியத்துவத்தை நாம் மறுப்பதற்கில்லை. இவை அனைத்திற்கும் மேலாக இந்திய மண்ணிலிருந்து தான் நாம் பெறவேண்டிய இனிய உணர்வுகள் அனைத்தையும் பெற்றபடி இருக்கின்றோம். எனவே இந்தியா எம்மை எந்நிலையிலும் கைவிட முடியாது என்றும் கூறியிருந்தேன். அதேவேளையில் மாறுபட்டு, வேறுபட்டு, கூறுபட்டுக்கிடக்கின்ற தமிழகம் தமக்குள் ஒன்றுபட்டு ஈழத்தமிழ் மக்கள் சார்பில ஓங்கிக் குரல் எழுப்பினால்தான் டில்லி செவிசாய்க்கும், சிந்தனை மாற்றம் ஏற்படும் என்ற கருத்தையும் தெரிவித்திருந்தேன். என்றுமே விழிப்போடு இருப்பதுதான் நாம் விடுதலைக்குக் கொடுக்கின்ற விலை என்பதையும் என் அறிக்கையிற் சுட்டிக்காட்டியிருந்தேன்"

ஏறக்குறைய 18 ஆண்டுகளாக இதே கருத்தை ஓங்கி ஒலித்த என்னை சென்ற ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி சடுதியாக இந்திய அரசு என்னை நாடு கடத்தியது. காரணம் வேறெதுவுமில்லை. அன்றைய சூழலில் தமிழருக்கு எதிரான சிறிலங்கா அரசின் சிந்தனையோடு இந்திய அரசின் சிந்தனையும் ஒன்றியிருந்தது. அவ்வேளையில் நான் பிரபாகரன் புகழ் பாடியதும், தமிழீழக் கோரிக்கையை ஓங்கி ஒலித்ததும் இந்திய அரசுக்குச் சிக்கலை ஏற்படுத்தியிருக்கக் கூடும். எனவே இந்தியா அன்றைய அரசியல் சூழலுக்கு ஏற்ப என்னை நாடு கடத்தியதைப் பெருந்தன்மையோடு "மறப்போம், மன்னிப்போம்" என்று அண்ணா வழியில் சிந்திக்க விரும்புகின்றேன். வெளியுறவுக் கொள்கைகள் மாற்றமுறுவது வழக்கம். ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கை என்றும் நிலைத்த தன்மையோடு இருப்பதில்லை. இன்றைய நண்பர்கள் நாளைய எதிரிகளாகவும் நாளைய எதிரிகள் இன்றைய நண்பர்களாகவும் இருப்பதற்குச் இச் சிந்தனை இடம் கொடுக்கின்றது. "Israel is the leper of Asia" (ஆசியாவின் அழுகு தொழுநோயாளி இஸ்ரேல்) என்று அன்று இஸ்ரேலை வர்ணித்த இந்தியா இன்று இஸ்ரேலை இறுக அணைத்து இன்பம் காணுகின்றது. இந்நிலையை இங்கிலாந்து நாட்டின் தலைமை அமைச்சராக விளங்கிய பாமஸ்டன் (Palmerston) பின்வருமாறு கூறினார். "No country's foreign policy is based on morality but, what is good for each country" (ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கை அறக்கோட்பாட்டின் அடிப்படையில் அமைவதில்லை. மாறாக ஒவ்வொரு நாட்டிற்கும் அந்தந்தச் சூழ்நிலைக்கேற்ப எது தனக்கு நன்மை அளிக்குமோ அதுவே அதனுடைய வெளியுறவுக் கொள்கையாக அமையும்.) என்று அவர் அன்று கூறியது இந்தியா மாறி மாறிக் கடைப பிடிக்கும் வெளியுறவுக் கொள்கைக்கு ஏற்றது போல் தோன்றுகிறது. ஆனால யான் அன்று என் அறிக்கையில் குறிப்பிட்டதற்கமைய ஈழத்தமிழர்கள்தான் இந்தியாவின் நிலையான நண்பர்கள். மாறாக ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு சிங்கள அரசும் இந்திய நலனுக்கு எதிராகச் செயற்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுகள் நிறைய உண்டு. வங்காள தேசப் போராட்டத்தில் ஈழத்தமிழன் இந்தியாவுடன் இணைந்திருக்க சிறிலங்கா அரசு இந்தியாவுக்கு எதிராகச் செயற்பட்டது. இன்னும் பல சான்றுகளைத் தரலாம். எனினும் விரிவஞ்சி அவற்றினை விடுத்தோம்.

பிரபாகரன் பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்களால் செல்லமாக "எம் தம்பி" என்று அழைக்கப்பட்டதுண்டு. ஆனால் இன்று அவர் தம்பி என்ற நிலையைக் கடந்து அரசியலில முதிர்ச்சிபெற்று அனைவருக்கும் வழிகாட்டும் 'அண்ணனாக' விளங்குகிறார். உலகப் புகழ்பெற்ற செய்தியாளர் அனிதா பிரதாப் (Anitha Pratap) தனது Island of Blood (இரத்தம் தோய்ந்த தீவு) என்ற நூலில் "From Thambi to Annai" (தம்பி என்ற நிலையிலிருந்து அண்ணன் என்ற நிலைக்கு) என்ற தலைப்பில் திரு. பிரபாகரன் மிக்க உயர்ந்துள்ளார் என்பதை 39 பக்கங்களில் (பக்கம் 66-104இல்) விளக்கியுள்ளார். இவ்வத்தியாயத்தை மேலெழுந்த நிலையில் நாம் பயில முயலக்கூடாது. மாறாக அதில் ஆழ்ந்து தோய்கின்றபோதுதான் உண்மை புலப்படும்.

## புலிகளின் தலைவருக்கு இன்று 47ஆவது அகவை

### நானும் கோவை மகேசனும் கண்ட பிரபாகரன்

1979இன் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 3 மாதங்கள் நான் யாழ்ப்பாணச் சிறையில் அடைக்கப் பட்டிருந்தேன். 2 மாதங்கள் யாழ்ப்பாண இராணுவ முகாமிலும் ஒரு மாதம் யாழ்ப்பாண ஒல்லாந்தர் கோட்டையிலும் என் நாள்கள் கழிந்தன. எனினும் 3 மாத முடிவில் நீ பயங்கரவாதி அல்ல என்ற முடிவுக்கு நாம் வந்துள்ளோம். எனவே நீ சிறையிலிருந்து விடுபடுகின்றாய் என்று இராணுவ பீடம் கூறியபோது நான் பயங்கரவாதி அல்ல என்பதை அறிய உங்களுக்கு 3 மாதம் பிடித்ததா என்று கேட்டபோது வாய்விட்டுச் சிரித்த அவர்கள் என்னைச் சிறையிலிருந்து விடுவித்தார்கள். இந்நிகழ்ச்சி நடைபெற்றுச் சில நாள்கள் கழிந்த நிலையில் பிரபாகரன் அவர்கள் என்னையும் திரு.கோவை மகேசன் அவர்களையும் அழைத்து ஏறக்குறைய ஒரு மணி நேரம் உரையாடினார். அவருடைய முக்கியத்துவத்தை உணராத நிலையில ஏதோ ஒரு துடிப்புள்ள இளைஞருடன் பேசுகிறோம் என்று கருதி நாம்தான் நிறையப் பேசினோம். ஆனால் அவரோ சில கேள்விகள் கேட்டுத் தெளிவுறும் நிலையில் இருந்தார். ஒரு தலைவனுக்குரிய அரும்பெரும் பண்புகள் அன்றே அவர்களிடம் குடிகொண்டிருந்ததை நாம் உணராமல் இருந்ததற்கு இன்று வருந்துகின்றோம். ஆகவேதான அவர் இன்று மாபெரும் தலைவராக மலர்ந்த நிலையில் அவருக்குத் தொண்டு செய்வதில் பெருமையடைகிறோம். கோவை மகேசன் எனக்குத துணையாக இல்லாது மறைந்தது எம்மை இன்றும் வாட்டி வதைக்கும் நிகழ்ச்சியாகும்.

### இந்தியப் படையுடன் பிரபாகரன் மோதல்

உலகின் 3ஆவது பெரும் வல்லரசாகிய இந்தியாவுடன் பிரபாகரன் தன் விருப்பத்துக்கு மாறாக மோத வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அப்பொழுது பிரபாகரன் அமெரிக்காவுடன் மோதிய சின்னஞ்சிறு நாடாகிய வியட்நாமை எடுத்துக்காட்டி நீதி, நியாயம் என்று வருகின்றபோது போராடியே தீரவேண்டும் என்று அனிதா பிரதாபுக்கு விளக்கியுள்ளார். "தோல்வி ஏற்படும் என்ற அச்சத்தினால தம் மக்களின் கொள்கையையோ உரிமையையோ விட்டுக்கொடுக்க முடியாது" என்று கூறிய அவர், ஓர் இனம் உரிமையை நிலைநாட்ட உறுதிபூண்டுவிட்டால் உலகில் எந்த சக்தியும் அதனைத் தடுக்கமுடியாது என்று அனிதா பிரதாபுக்கு மேலும் தெளிவுற விளக்கியுள்ளார். விரிவினை "இரத்தம் தோய்ந்த தீவு" என்னும் நூலில் காண்க.

பிரபாகரனைப் பலர் மதிப்பிடுகின்ற போது அவர் ஒரு 'Military Genius' (படை நுட்பவியலாளர்) என்றே கூறுவர். ஈழத் தமிழ மக்களுக்காக அவர் கையாண்ட போர் வழிமுறைகள் அவர் போர்களில் ஈட்டிய மாபெரும் வெற்றிகள் மேற்குறித்த கணிப்புகளை உறுதிப்படுத்துகின்றது. ஆனால் அனைத்திற்கும் மேலாக ஓர் ஆழ்ந்த அரசியல் அறிஞர் (Statesman) என்பதற்கு அவர் முன்பு கூட்டி உணர்ந்து உணர்த்திய அறிவுரைகள் - எச்சரிக்கைகள் சான்று கூறும். இலங்கை - இந்திய ஒப்பந்தம் "ஈழத் தமிழர் மீது திணிக்கப்பட்ட நிர்ப்பந்தம்; அது காலப்போக்கில் தீப்பந்தமாக பற்றி எரியும்" என்று அவர் எச்சரித்தது நூற்றுக்கு நூறு உண்மையாகிவிட்டது. ராஜீவ் காந்தி தலைமையில் இந்திய அரசும் ஜே.ஆர்.தலைமையில் சிறிலங்கா அரசும் கையாண்ட வழிமுறைகளை எவ்வளவு தூரம் நுணுக்கமாகப் பிரபாகரன் தோற்கடித்தார் என்பதை எண்ணுகின்றபோது உலகம் வியப்பில் ஆழ்கிறது. அவரின் நுண்மான் நுழைபுலம் வள்ளுவர் கூறும் 'அறிவுடையார் ஆவது அறிவார்' என்ற கோட்பாட்டை முற்றும் உணர்ந்தவராக விளங்குகின்றார். பிரபாகரன் அவர்கள் அரசறிவியலில் (Political Science) முழுமையாகத் தேர்ச்சி பெற்றோர் 'Concept of futurelogy' (எதிர்காலத்தை எண்ணிப்பார்த்தல்) என்ற கோட்பாட்டை மெத்தப்படித்த இவ்வரசியல் அறிஞர்கள் அடிக்கடி வலியுறுத்துவது உண்டு. ஆனால் மெத்தப் படிப்பு எதுவும் இல்லாத மேதகு பிரபாகரன் அவர்கள் இன்று நேற்றல்ல அன்றே தொலைநோக்குச் சிந்தனையுடன் ஈழத்தமிழரை எதிர்நோக்கும் ஆபத்தைப் பற்றியும், அழிவைப் பற்றியும் கூறியுள்ள கருத்துக்கள் அறிஞர் உலகை அதிர்ச்சியிலும் வியப்பிலும் ஆழ்த்தியுள்ளது. இந்தியத் துணைக்கண்டத்தில் - தமிழகத்தில் 18 ஆண்டுகள் ஈழத் தமிழர் சார்பில் அரசியல் பரப்புரையில் (Political propaganda) பல அறிவாளிகளுடன் உரையாடி உறவு பூணும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. குறிப்பாகப் பல்கலைக்கழக வட்டாரங்களில் சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் டில்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் ஆகியவற்றிலும், ஆந்திரா, கேரளா, கல்கத்தா, பர்நாசி இந்துப் பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிலும் துணைவேந்தர்கள் உட்பட தலைமைப்பீடங்களுடன் ஈழச் சிக்கலையொட்டி அவர்களுடன் உரையாடியபோது தாம் பெற்ற நூலறிவிற்கு மேலாக - பெற்ற முனைவர் (டாக்டர்) பட்டத்திற்கு மேலாக - பிரபாகரன் காட்டுகின்ற அரசியல் தொலைநோக்கு எளிதில் எடுத்துரைக்க முடியாத அளவிற்கு தம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது என்று கூறியுள்ளனர். 'உலகம் என்ற பல்கலைக்கழகத்தில் அனுபவம் என்ற பேராசிரியர்களைக் கொண்டே தன் அறிவை வளர்த்துள்ளேன்' என்று தன்னடக்கத்துடன் அடிக்கடி பிரபாகரன் கூறுவதுண்டு. அவரின் சிந்தனையும் செயற்பாடும் இக்கூற்றினை மெய்ப்பித்துள்ளன.



### பிரபாகரனின் விலைபோகாத் தன்மை

ஈழத்தமிழர்களிடையே பல இராணுவ இயக்கங்கள் தோன்றிய போதும் அவை செல்லாக்காசுகளாக செத்தொழிந்து போய்விட்டன. ஆனால் ஈராயிரம் போர்வீரர்களைத்தானே தமிழீழ விடுதலைப் புலிகள் கொண்டுள்ளனர் என்று அன்று ராஜீவ்காந்தி எள்ளி நகையாடியபோதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஆக 1500 பேர்கள்தான் உள்ளனர் என்று "வாஷிங்ரன் போஸ்ட்" இதழுக்கு அண்மையில் இலங்கையின் குடியரசுத் தலைவர் சந்திரிகா கேலியாக நேர்காணல் அளித்தபோதும் உலகம் இக்கூற்றை நம்ப மறுக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் எத்தனை போர்வீரர்கள் உள்ளனர் என்பதை நாம் கணக்கிடமுடியாது. தமிழீழ உணர்வுள்ள அனைவரும் இவ்வியக்கத்தில் உறுப்பினர்களாகவும், ஆதரவாளர்களாகவும் விளங்குகின்றனர். "மக்களெல்லாம் பிரபாகரன் பக்கம்" என்று காசி ஆனந்தனின் பாடல் இன்றைய உண்மை நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படுகின்றது. கட்டுப்பாடும், கட்டுக்கோப்பும், கண்ணியமும், கடமையுணர்ச்சியும் இவ்வியக்கத்தின் உயிர் மூச்சாக விளங்குகின்றன. திரு.கிருஷ்ண மேனனின் வாழ்க்கை வரலாற்றினை வரைந்துள்ள திரு.ஜோஜ் அவர்கள் காந்தியடிகளைப் பற்றி ஒருமுக்கிய குறிப்பினைத் தருகின்றார். "Gandhi is a dangerous enemy. Because women, wine, wealth and power cannot buy him over" (மதுவோ, மாதுவோ, பணமோ, பதவியோ, பட்டமோ அண்ணல் காந்தியை விலைக்கு வாங்க முடியாது). ஆகையால் அவர் ஆபத்தான எதிரி என்று கூறியுள்ளார். இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னாள் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி உட்படப் பலர் பிரபாகரனை விலைக்கு வாங்க முயன்றனர். ஆனால் அவர்கள் கண்டது படுதோல்வி. எனவே தான் எதிரிகள் கணிப்பில் பிரபாகரன் மிக ஆபத்தான எதிரியாகக் காட்சியளிக்கின்றார். "எமை நத்து வாய் என எதிரிகள் கோடி இட்டடைத்தாலும் தொடேன்" என்று பிரபாகரன் சொல்லிலும் செயலிலும் செயற்பட்டதன் விளைவு விலை போக மறுக்கின்ற தலைவராக பிரபாகரன் எம்முன் காட்சியளிக்கின்றார். உலகின் கண் முன்னேயும் அவரின் தோற்றம் அப்படியே அமைந்துள்ளது.

### நெல்சன் மண்டேலா, அரபாத், பிரபாகரன்

தம் இனத்திற்காகவும், நாட்டிற்காகவும் போராடுகின்ற தென்னாபிரிக்கத் தலைவன் நெல்சன் மண்டேலாவோ அல்லது பலஸ்தீன நாட்டின் தலைவர் யஸீர் அரபாத்தையோ நாம் குறைத்து மதிப்பிடவில்லை. 27ஆண்டுகள் மக்கள் தொடர்பற்று தனிச் சிறையில் தன் கொள்கைக்காக அவர் வாடி வதங்கியதை வரலாறு நன்கு பதித்துள்ளது. பல எதிர்ப்புகளுக்கு இடையில் பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத் நடத்துகின்ற போராட்டம் எம்மை மெய் சிலிர்க்க வைக்கின்றது. ஆனால் இவ்விரு தலைவர்களுக்கும் உலகின் பல பாகங்களிலும் ஆதரவு இருந்தது - ஆதரவு இருக்கிறது என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் அமெரிக்கா உட்பட பல வல்லரசுகள் ஈழத்தமிழர் சார்பில் விடுதலைப் புலிகள் நடத்துகின்ற போராட்டத்தை சிறுமைப்படுத்தி பயங்கரவாதம் என்ற பட்டம் சுமத்தி இவ்வியக்கத்திற்குத் தடை விதித்த நிலையிலும் இவ்வியக்கம் தொடர்ந்து இயங்குகின்றது என்றால் வெற்றிக்கு மேல், வெற்றியை ஈட்டி வருகிறது என்றால் புலிகள் இயக்கத்தின் வீரதீர செயல்கள், தியாகங்களே காரணம் என்பதை எல்லோரும் ஏற்பர்.

ஆனால் இந்த வீரதீர செயல்களை நிறைவேற்றுவதற்குக் காரணமாய், ஆளுமையுடையவராய் விளங்குபவர் நம் பிரபாகரன் அவர்களே. உன் நாமம் என் நாவில் மறந்தறியேன் என்று தமிழ் கூறும் நல்லுலகம் பிரபாகரனை வாழ்த்தியபடியே உள்ளது. அதேவேளையில் பிரபாகரனைத் தூற்றுகின்ற சிங்களவர்கள் உட்பட மற்றையோரும் நாளும் பொழுதும் பிரபாகரன் பெயரை உச்சரித்தபடியே உள்ளனர். இலங்கையில் நாள்தோறும் வெளிவருகின்ற செய்தி இதழ்கள் அது தமிழிலோ, சிங்களத்திலோ, ஆங்கிலத்திலோ வெளிவருவனவாக இருப்பினும் சரி அவர் பெயரை உச்சரித்தபடியே இருக்கின்றன. காரணம் அவர் பேசப்படும் பொருளாக விளங்குகின்றார். அவரைப் புறக்கணித்து நாட்டில் எதுவும் நடைபெறப்போவதில்லை. பிரபாகரனைத் திட்டித் தீர்ப்போர் கூட ஓர் உண்மையை உணர்ந்துள்ளனர். இலங்கையை எதிர்நோக்கியுள்ள இனச்சிக்கலுக்குத் தீர்வுகாணாத நிலையில் இத்தீவின் முன்னேற்றம் பொய்யாய் பழங்கதையாய்ப் போய் விடும். ஆகவேதான் இன்று இல்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் நாளை மறுநாள் பிரபாகரனின் குறிக்கோளாகிய தமிழீழத்தை சிங்கள அரசு வழங்கியே தீரவேண்டும். "பூத்ததடா தமிழீழம், புலர்ந்ததடா தமிழன் வாழ்வு" என்று கவிஞன் காசி ஆனந்தன் காண்கின்ற கனவு வெறுங்கனவல்ல. மாறாக நனவாவது உறுதி. பாரதி கண்ட கனவு பாரத விடுதலை. கவிஞர் இக்பால் கண்ட கனவு பாகிஸ்தானின் தோற்றம். பாரதிதாசன் கண்ட கனவு தமிழின எழுச்சி. எனவே, கவிஞன் காசி ஆனந்தன் காண்கின்ற கனவை உலகின் எந்த சக்தியும் தடுக்க முடியாது. ஐ.நா. மன்றத்தின் 188ஆவது நாடாக தமிழீழம் அங்கம் வகிப்பதும் உறுதி. இது காலத்தின் கட்டாயம். வரலாறு தருகின்ற தீர்ப்பாகும்.

ஈழத் தமிழனின் ஒரே தலைவன் பிரபாகரன். ஒரே இயக்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம். நாம் அனைவரும் இத்தலைவனுக்கும் இயக்கத்துக்கும் பக்கபலமாக பணியாற்றுவோமாக.

எதிர்வரும் தேர்தல் இதை உணர்த்தியே தீரும். உலகம் உண்மையை உணர்ந்து எம் சார்பில் குரல் எழுப்புவது உறுதி. ★

# யாழ்.குடாநாடு குறுகிய காலத்தில் நல்ல அபிவிருத்தியைக் கண்டுள்ளது

## வடமராட்சிக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஸ்ரீரங்கேஸ்வரன்

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் தமது பதவிக் காலத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி அப்பிரதேசத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இந்தக் குறிக்கோளை தாரகமந்திரமாகக் கொண்ட எமது தலைவரின் வழிநடத்துதலில் எமது பிரதேசம் குறுகிய காலத்தில் பல அபிவிருத்திகளைக் கண்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள்.

- இவ்வாறு பருத்தித்துறை முனைப்பகுதி கடற்றொழிலாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஈ.பி.டி.பி. வேட்பாளர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்) உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

குடாநாட்டினை அபிவிருத்திப் பணியில் முன்னேற்ற நாங்கள் முயன்றுகொண்டிருக்கும் வேளையில் எதிர்பாராமல் மக்கள் இடம்பெயர்வுகளால் சொல்லொணாத துயரங்களை சந்திக்கின்றனர். வீடிழந்து சொத்திழந்து அகதிகளாக வரும் எமது மக்களை ஆதரித்து அரவணைத்து அவர்களுக்குத் தேவையான நலன்களைக் கவனிக்கவேண்டிய நிலையும் மக்கள் பிரதிநிதிகளுக்கு ஏற்படுகிறது.

மக்களின் அவல நிலையின்போது ஓடிவந்து உதவாமல் வேறொரு இடத்திலிருந்துகொண்டு மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் தேர்தல் ஒன்று வரும்போது அவர்களைக் கரம்கூப்பி கும்பிடுவது எவ்வளவு கேவலமானது.

**தேர்தல் களம்**

இப்படியான மக்கள்பிரதிநிதிகள் எமது பிரதேசத்துக்குத் தேவையா?

எமது பிரதேச மக்கள் காலத்துக்குக் காலம் அனுபவித்த துயரங்களை உங்களுடன் இருந்த ஈ.பி.டி.பியினர் நன்கு அறிவர். அதனாலேயே உங்களுக்குக் கஷ்டங்கள் வந்தபோதெல்லாம் எம்மால் முடிந்த அளவு முயற்சி செய்து உதவிகளைச் செய்துள்ளோம்.

இடையிடையே இடம்பெற்ற அசம்பாவிதங்களால் சொல்லொணாத துயரங்களை மக்கள் அனுபவிக்க நேரிட்டது. உங்கள் துயரங்களைப் போக்க எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்த முயற்சிகளைத் தாங்கள் அறிவீர்கள். நீங்கள் அனுபவித்த இன்னல்களை வேடிக்கை பார்த்தவர்கள் இன்று தங்களிடமே கையேந்தி வாக்குக்கேட்பது வேடிக்கையாக உள்ளது.

மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற ஆசனத்தை பிடித்துக்கொண்டதும் மக்களை மறந்துவிட்ட அரசியல்வாதிகள் ஐந்து ஆண்டுகள் தென்னிலங்கையில் அரசியல் வாதிகளுடன் கும்மாளம் அடிக்கலாமென நினைத்தவர்கள் திடீரென தேர்தல் அறிவிக்கப்பட்டதால் மக்களுக்கு என்ன கூறுவது என தெரியாமல் ஈ.பி.டி.பி.யினர் செய்த சேவைகளை, பணிகளை குறை சொல்லிக்கொண்டு வந்துள்ளார்கள்.

இந்த அரசியல்வாதிகள் நாடாளுமன்றம் சென்ற ஒரு வருடகாலத்தில் மேற்கொண்ட சேவைகள், அபிவிருத்திப் பணிகள் எவையென கூறுவார்களா? செயல் திட்டங்கள் எதுவுமில்லாத இந்த அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றுவதற்கே திட்டங்கள் தீட்டுகிறார்களே தவிர மக்களுக்கு சேவை செய்யும் நோக்கம் எதுவும் கிடையாது என்பதை கடந்த ஒரு வருட காலத்தில் நீங்கள் அறிவீர்கள். எனவே உங்களுடன் இருந்து மக்களுக்கு சேவையாற்றும் ஈ.பி.டி.பி.யினரின் கரங்களைப் பலப்படுத்த உரிய வாக்குகளைப் பயன்படுத்துங்கள் - என்றார்.

பருத்தித்துறைப் பிரதேசசபை உப தலைவர் ப.இரவீந்திரன் உரையாற்றுகையில் :-

கடந்த காலங்களில் வடமராட்சி பகுதி மக்களுக்கு எமது கட்சியின் வழங்கிய சேவைகள், அபிவிருத்திப் பணிகள் அனைத்தும் மக்களாகிய நீங்கள் அறிவீர்கள். எமது கட்சிக்கு மக்கள் பலம் அதிகரித்து வருவதை பொறுக்கமுடியாதவர்கள் எமது சேவைகளை, அபிவிருத்திப் பணிகளைக் கொச்சைப்படுத்தி வசைபாடி வருகினறனர். எமது கட்சியை வசை பாடுவதால் அவர்களுக்குப் பயன் ஏதும் கிடைக்கப்போவதில்லை.

இந்தத் தேர்தலில் எமது கட்சிக்கு மக்கள் அளிக்கும் வாக்குப் பலம் எமது சேவைக்கு, அபிவிருத்திப் பணிக்கு வழங்கும் அங்கீகாரம் ஆகும். எம்மை சீண்டிவிட்டு வாக்குப பெற விரும்புவோருக்கு இத்தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்டுவர் என நம்புகிறோம் - என்றார்.

(க-117)

### கொடுப்பனவு

வடமராட்சி கடலில் மீன் பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட திக்கம் தொடக்கம் அம்பன் வரையான பகுதி மக்களுக்கு நிவாரணக் கொடுப்பனவு வழங்கும் பணி வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (க-117)

### தமிழ்...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் யுவதிகளின் இழப்புக்களை தமக்கு அறுவடையாக்கிக்கொள்ளவே இவர்கள் வந்திருக்கிறார்கள்.

தமிழ்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக தமக்கு என்ன நிலைப்பாடு இருக்கிறது என்பதை தெரிவிக்காத, தெரிவிக்க முடியாத இந்த வெட்கக் கேடான கூட்டு முன்னணியினர் தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் தமது உற்ற சுற்றத்திற்கும் அரசிடமிருந்து வசதிகளைப் பெற எப்போதுமே பின்னிற்பதில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் தமக்கு கிடைக்கும் ஆடம்பர வாகனங்கள், வீட்டு வசதிகள், பாதுகாப்பு பொலீஸ் வசதிகள், இலவச தொலைபேசி, சம்பளம், ஓய்வூதியம் போன்றவற்றையும் இவர்கள் இழக்கத் தயாரில்லை - என்றார்.

வேட்பாளர் வல்லி சுந்தரமும் அங்கு உரையாற்றினார்.

மானிப்பாய், பண்டத்தரிப்பு, கொக்குவில், திருநெல்வேலி, உரும்பிராய், கோண்டாவில், சுழிபுரம், சித்தன்கேணி, உடுவில், மருதனார்மடம் ஆகிய பகுதிகளில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தினர் தமது பிரசார நடவடிக்கைகளை நேற்றுமுன்தினம் மேற்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-7)


## கண்ணீர் அஞ்சலி

**செல்லையா கருணாகரன் (ஆசிரியர்)**

**(யா/இயற்றாலை அ.மி.த.க.பாடசாலை)**

**இயற்றாலை அ.மி.த.கவில் இணைந்து இறுதிவரை அன்புடன் இன்முகங்காட்டி இனியவை கூறி இன்றெமைப்பிரிந்த கருணாகரன் ஆத்மா கந்தன் அடிசேர இறைவனை இறைஞ்சுவோம் இந்நாளில்.**

**இவரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

*மந்துவில் வடக்கு,*
*கொடிகாமம்.*
(94938)

சி.இராஜகுலசிங்கம் (ஆசிரியர்)
குடும்பத்தினரும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நான்காம் வருட பொருளியற்றுறை மாணவி

**த.உதயேஸ்வரி** அவர்களின் அன்புத் தந்தையார்

**அப்பாக்குட்டி தம்பையா**

அவர்களின் பிரிவினால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அமரருக்கு கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குவதோடு அவரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

4ஆம்வருட பொருளியல்,
*யாழ்- பல்கலைக்கழகம்.* (94936) சிறப்புக்கலை மாணவர்கள்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யாழ்.பிரதேசத்தில் கூட்டுறவுத்துறையில் அளப்பரிய சேவை புரிந்து அண்மையில் பதவி உயர்வு பெற்றுள்ள பின்வருவோரை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப்
பதவி உயர்வு பெற்ற

**திரு.பொ.சிவலிங்கம்**

**திருமதி யோகா செல்வரத்தினம்**

மற்றும்

**மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராகப்**
பதவி உயர்வு பெற்ற

**திரு.நா.தவநாதன்**

**திரு.செ.திருச்செல்வம்**

**திரு.கு.குமாரகுருலிங்கம்**

ஆகியோரையும் அவர்களின் சேவையையும்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர், பணியாளர்கள்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்,
பண்டத்தரிப்பு.

(C-19458)

## ஒத்துமாறுதல்

2001/2002 கல்வியாண்டு சப்ரகமுவா பல்கலைக்கழகத்துக்கு (Arts II) சமூக விஞ்ஞானமும் மொழிகளும் என்னும் கற்கை நெறிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் அனுமதி பெற்ற அல்லது விசேட அனுமதி பெற்ற கிறிஸ்தவ நாகரிகம் அல்லது அளவையியல் அல்லது நாடகமும் அரங்கியலும் கற்க ஒத்து மாறுவதற்கு விரும்புவோர் உடன் தகவல் தரவும்.

விளம்பர இல. 1405
C/o உதயன்,
யாழ்ப்பாணம். (94935)


## கல்விச்சாலைக் காட்சிகள்




ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் பொன்.இராமநாதன் உரையாற்றுவதை படத்தில் காணலாம். பாடசாலை அதிபர் நயினை எஸ்.எஸ். பிள்ளை, யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை மூத்த விரிவுரையாளர் கலைவாணி இராமநாதன், மக்கள் வங்கி முகாமையாளர் சி.பத்மநாதன் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளனர். (ஐ-51)



வல்லை சிவகுரு வித்தியாலயத்தில் அண்மையில் பரிசில் விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வல்வை நகரசபைத் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களுடன் பாடசாலை அதிபர் த.தவேந்திரராஜாவையும் படத்தில் காணலாம். (ஐ)



பற்றிஷன் தொழிற்பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி பெற்றோருக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ)



ஆனைக்கோட்டை உயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலைய முன்பள்ளி விளையாட்டுப்போட்டி அண்மையில் முன்பள்ளி மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் ந.வேதநாயகன் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்குப் பரிசு வழங்கும் காட்சி. (ஐ)

# தொண்டர் ஆசிரியர் போராட்டம் திருமலையில் தொடர்கின்றது

திருகோணமலை, நவ. 26

திருகோணமலையில் தொண்டர் ஆசிரியர்களின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

அரசியல் கட்சிப் பிரமுகர்களோ, அதிகாரிகளோ இதுவரை இவர்களைக் கண்டு கொள்ளாமல் இருந்து வருகின்றனர். இது உண்ணாவிரதிகளுக்குப் பலத்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் பரவலாக தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஈ. பி. டி. பி கட்சியினர், தமது ஆதரவாளர்களுக்கு சாவிக் கோர்வைகளை வழங்கி வருகின்றனர்.

இச்சாவிக் கோர்வைகளின் ஒரு புறத்தில் அமைச்சர் தேவானந்தாவின் படமும், மறுபுறத்தில் வீணையின் படமும், பொறிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஐ-3)

## ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

கோப்பாய், நவ. 26

கோப்பாய்ப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் புதன்கிழமை காலை 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஐ-72)

# பெற்றோல் தட்டுப்பாடு நீடிப்பு!

# வாகன உரிமையாளர்கள் பாதிப்பு!!

குடாநாட்டில் எரிபொருள் வகைகளுக்கு—குறிப்பாகப் பெற்றோலுக்குப்—பலத்த தட்டுப்பாடு தொடர்ந்து நிலவி வருகிறது வெளிச் சந்தையில் ஒரு லீற்றர் பெற்றோல் நேற்று 160ரூபாவாக விற்கப்பட்டது,

மோட்டார்சைக்கிள்கள் மற்றும் வாகனங்களுக்கு பெற்றோல் கிடைக்காது பொதுமக்கள் அல்லலுறுவதைக் காணமுடிகிறது.

இதேவேளை—

குடாநாட்டு மக்களின் பாவனைக்காக நாளாந்தம் 5 ஆயிரம் லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டு வருவதாக எரிபொருள் விநியோகத்துடன் தொடர்புடைய படை அதிகாரி ஒருவர் யாழ். செயலக அதிகாரிகளிடம் தெரிவித்திருப்பதாக அறியவருகிறது.

இது தொடர்பாக பெற்றோலிய கூட்டுத்தாபன வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது—

குடாநாட்டு மக்களுக்கு வழங்கத் தினந்தோறும் 6ஆயிரம் லீற்றர் பெற்றோல் தேவையாக உள்ளது. ஆனால் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு மொத்தம் 29 ஆயிரம் லீற்றர் பெற்றோல் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று குடாநாட்டு மக்களுக்கு வழங்க நாள் ஒன்றுக்கு 35 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய்யும் 15 ஆயிரம் லீற்றர் டீசலும் தேவையாக உள்ளது. ஆனால் கடந்த 20 நாள்களுக்கு மொத்தம் ஒரு லட்சத்து 5 ஆயிரத்து 600 லீற்றர் மண்ணெண்ணையும் ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 400 லீற்றர் டீசலுமே எமக்கு வழங்கப்பட்டன.

அவற்றை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கூடாக பொதுமக்களுக்குப் பங்கிட்டு விநியோகித்தோம். எமக்குத் தினந்தோறும் 5 ஆயிரம் லீற்றர் பெற்றோல் வழங்கப்பட்டால் குடாநாட்டில் பெற்றோலுக்குத் தட்டுப்பாடே இருக்காது என்று அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-6)

## விவரப்பட்டியலில் பெயரும் இலக்கமும் தவிர்ப்பு:

# முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் தேர்தல் ஆணையாளருக்கு கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 26

தேர்தல் திணைக்களத்தால் வாக்காளர் அட்டையுடன் விநியோகிக்கப்படும் வேட்பாளர் விவரப்பட்டியலில் தனது பெயரும் இலக்கமும் சேர்க்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான ஏ. எஸ். சுபியான் முறையிட்டிருந்தார்.

இது தொடர்பாக யாழ். உதவித் தேர்தல் ஆணையாளருக்கு அவர் அனுப்பியுள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.—

யாழ். மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இலக்கம் 3இல் போட்டியிடும் முதன்மை வேட்பாளரான ஏ.எஸ்.சுபியான் ஆகிய எனது இலக்கமும் பெயரும் தேர்தல் திணைக்களத்தால் வாக்காளர் அட்டையுடன் விநியோகிக்கப்படும் வேட்பாளர் விவரப்பட்டியலில் தமிழ்ப்பக்கத்தில் இடம்பெறாதது குறித்து எனது கடுமையான ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதனால் தபால் மூலம் அளிக்கப்பட்ட வாக்குகளில் கணிசமான வாக்குகளை நான் இழந்திருப்பதோடு நடைபெறக்கூடிய தேர்தலில் எனது வாக்காளர்களது வாக்குகளை நான் இழக்க வேண்டிய சூழ்நிலை தங்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

இது ஒரு திட்டமிடப்பட்ட சதியா என்ற கேள்வி எனது வாக்காளர்கள், ஆதரவாளர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து உடன் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தல் கண்காணிப்பாளர்கள் நடத்தும் கலந்துரையாடல்

## வேட்பாளர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 26

நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் கண்காணிப்பாளர்களாகப் பணியாற்ற வந்துள்ள ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகள் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை நாளை செவ்வாய்க்கிழமை நடத்த உள்ளனர்.

நல்லூரில் உள்ள ஜி. ரி. இசற். அலுவலகத்தில் நாளை காலை 10.30 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களோ, அல்லது அவர்களது பிரதிநிதிகளோ இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும்படியும்—

தேர்தல் தொடர்பான தத்தமது கருத்துக்களைத் தேர்தல் கண்காணிப்பாளர்களுடன் ஆலோசிக்கும்படியும்—

கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ)

# இருதோட்டங்கள் பொறுப்பேற்பு; ஒரு வருட வேலைநிறுத்தம் முடிவு

கொழும்பு, நவ. 26

மொனராகலை மாவட்டத்தில் உள்ள மொனராகல குரூப், குமாரவத்தை ஆகிய இரு தோட்டங்களை அரசாங்கம் பொறுப்பேற்றது. இதை அடுத்து ஒரு வருடகாலமாக 2000 தொழிலாளர்கள் நடத்திவந்த வேலைநிறுத்தப் போராட்டம் நேற்றுடன் முடிவுற்றது என்று இ. தொ. ஐ.முன்னணி தலைவர் டி.வி. சென்னன் தெரிவித்தார்

இவ்விரு தோட்டங்களும் சியம்பலாண்டுவ பிளான்டேசன் கம்பனியினால் நிர்வகிக்கப்பட்டன. கடந்த இரண்டு வருடங்களாகத் தொழிலாளர்களின் ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதியம், வருடாந்தவிடுமுறைபோனஸ் ஊக்குவிப்பு போனஸ் பிரசவகாலப் பணம் என்பன செலுத்தப்படவில்லை.

இதனை ஆட்சேபித்தே இரு தோட்டங்களையும் சேர்ந்த 2,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தி வந்தனர். வேலை நிறுத்தத்தைத் தீர்த்து வைக்க அமைச்சு மட்டத்திலும், தொழில் திணைக்களத்திலும் நடைபெற்ற பேச்சுக்கள் வெற்றிபெறவில்லை. இறுதியில் பிரதமரின் பணிப்பின் பேரில் முன்னாள் அமைச்சர் ஜயசிங்க நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து அரச நிறுவனமான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை அத்தோட்டங்களைப் பொறுப்பேற்றது.

தொழிலாளரின் கொடுப்பனவுகள் தொடர்பாக சியம்பலாண்டுவ கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என திருமதி ஜயசிங்க அறிவித்துள்ளார். தொழிலாளர்களுக்கு தலா ஆயிரம் ரூபா இலவசக் கொடுப்பனவாக வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# வாக்களிப்பு நிலையங்கள் தோறும் 3 பொலிஸாரையாவது நிறுத்துக!

## தேர்தல் ஆணையாளரிடம் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, நவ. 26

தேர்தல் சுதந்திரமாக நடத்தப்படுவதை உறுதிப்படுத்த ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் 3 பொலிஸாரைக் கடமையில் ஈடுபடுத்துமாறு அரசியல் கட்சிகள் தேர்தல் ஆணையாளரைக் கோரியுள்ளன.

அரசமைப்புச் சட்டத்தின் 17 ஆவது திருத்தத்தின் அதற்கான உத்தரவைப் பிறப்பிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையாளருக்கு உண்டெனவும் அரசியல் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

வாக்களிப்பு நிலையங்களுக்கு அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படும் முகவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை வழங்கும்படியும் கட்சி செயலாளர்கள் தேர்தல் ஆணையாளரைக் கோரியுள்ளனர்.

இதற்கிடையில் வன்முறைகள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் 500 வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தத் தேர்தல் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது. கடந்த பொதுத் தேர்தலின் போது இடம்பெற்ற சம்பவங்களையும் இம்முறை வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் அதிக வன்முறைகள் இடம்பெற்ற பிரதேசங்களையும் கருத்தில் கொண்டு மேற்படி 500 வாக்களிப்பு நிலையங்கள் இனங்காணப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 30 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. (ஐ-3)

# இறந்தவர் பெயரில் வாக்களிக்க வருபவர் குறித்து எச்சரிக்கை

குருநகர், நவ. 26

எதிர்வரும் டிசெம்பர் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் இறந்தவர் என வாக்காளர் பதிவேட்டையில் குறிப்பிடப்பட்ட எவருக்காவது உரிய வாக்காளர் அட்டையுடன் வாக்களிக்க வந்து எவராவது வாக்குச் சீட்டைக் கோரினால், அவரை அங்கு காவற் கடமையில் ஈடுபட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலராகக் கடமைபுரிய உள்ளவர்களுக்கு நடத்தப்பட்ட பயிற்சி வகுப்பில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

இறந்தவர்கள், தபால்மூலம் தமது வாக்கைச் செலுத்தியவர்கள், இடம்பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வசித்து வருபவர்கள் பற்றிய விசேட குறியீடுகள் வாக்காளர் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன எனவும்—

இத்தகையவர்களின் பெயர்கள் நீக்கப்பட்ட பட்டியலின் படி அவர்கள் தேர்தலில் குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் வாக்களிக்கும் உரிமை அற்றவர்கள் எனவும் —

அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஐ-51)

## ஜி.சீ.ஈ. பரீட்சை முடிவு:

# எதிர்பார்த்த பெறுபேறு இல்லை; மாணவன் தற்கொலை முயற்சி

யாழ்ப்பாணம், நவ. 26

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் தான் எதிர்பார்த்த பெறுபேறுகள் கிடைக்காததால் விரக்தியுற்ற மாணவன் ஒருவன் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

யாழ்.நகரப்பகுதியில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றின் மாணவனே தான் எதிர்பார்த்த பரீட்சைப் பெறுபேறு கிடைக்கவில்லை என்பதால் நேற்றுப் பிற்பகல் தூக்க மாத்திரைகளை உட்கொண்டு மயக்கமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

குடாநாட்டில் பரீட்சைப் பெறுபேறுகள் முழுமையாக வெளியிடப்படாத நிலையில் 'இன்ரர் நெற்' மூலம் தனது பரீட்சைப் பெறுபேறுகளை இவர் நேற்றுக்காலை அறிந்து கொண்டதாகவும் —

இவர் தோற்றிய 3 பாடங்களிலும் சித்தியடைந்த போதிலும் தான் கடினமாகப் படித்தும் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லை என்று நண்பர்களிடம் கூறிவிட்டு வீட்டிற்குச் சென்று பின்னர் தற்கொலை புரிந்துகொள்ளும் நோக்குடன் மாத்திரைகளை உட்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

## தாச்சி போட்டிகள்

கோப்பாய், நவ. 26

யாழ். வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான 13வயதுக்குட்பட்ட ஆண், பெண் குழுக்களுக்கு இடையிலான தாச்சிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.

இன்று கோப்பாய்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் மகாவித்தியாலயத்திலும்—

நாளை செவ்வாய்க்கிழமை நல்லூர், யாழ்ப்பாணம் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டி கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும்—

வலய மட்டப் போட்டிகள் புதன்கிழமை கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளன.

போட்டிகள் காலை 9 மணி முதல் மாலை 4.30 மணி வரை நடைபெறும். (ஐ-72)

# 'சுடர் ஒளி' தினசரிக்கு 'குமுதம்' இதழ் புகழாரம்!

கொழும்பிலிருந்து வெளியாகும் நமது சகோதரத் தினசரி 'சுடர் ஒளி'க்கு தமிழகத்திலிருந்து வெளியாகும் புகழ்பெற்ற குமுதம் வார இதழ் புகழாரம் சூட்டியிருக்கின்றது.

'குமுதம்' வார இதழில் 'அரசு பதில்கள்' பகுதியிலேயே இந்தப் புகழாரம் சூட்டப்பட்டிருக்கின்றது.

திருச்சியைச் சேர்ந்த காஜாமுகைதீன் என்பவர் "சமீபத்தில் ஆச்சரியப்பட்டது எதனால்?" என்று ஒரு கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு அரசு அளித்த பதில் இவ்வாறு அமைந்திருந்தது:-

**'சுடர் ஒளி' என்று ஓர் இலங்கைத் தமிழ் தினசரியின் பிரதிகளைப் படிக்க நேர்ந்தது. தமிழ்நாட்டுச் செய்தித்தாள்களின் வடிவத்தில் ஜனரஞ்சகமான தலைப்புகளில், வண்ணவண்ணப் புகைப்படங்களோடு ஆச்சரியப்பட வைத்தது அது. சுத்தமான தமிழில் சினிமா மற்றும் உளளூர் வெளிநாட்டுச் செய்திகள், நகைக்கடை (அங்கேயும் ஒரு லட்ச ரூபா பரிசு!), ஆண்டெனா, வெள்ளவத்தையில் ஃப்ளாட், இந்திய இறக்குமதி சல்வார் விளம்பரங்களுக்கு மத்தியில் 'பருத்திக் கடலில் கப்பல் விளாசி எரிகிறது', 'அமைதி!... அமைதி!... மூதூரில் கதறல்', 'புளொட் இருவர் சுட்டுக்கொலை', 'ரெலோவுடன் முறுகல் நிலை', 'ஷெல்லடிக்கு விவசாயிகள் பலி' என்று போகிற போக்கில் திடுக்கிட வைக்கும் தலைப்புகள். 'Life goes on' என்பதற்கு சரியான உதாரணம்.**


## 25ஆவது ஆண்டு நிறைவு திருமண வாழ்த்து

திருமண வாழ்வில் வெள்ளி விழாக் காணும்

**பாலசிங்கம் விஜயலக்சுமி**

**தம்பதியினர்**

இரு மனம் கலந்த
திருமண வாழ்வுதனில்
இன்பமுடன் என்றுமே
நீடூழி வாழ...

*இனிதுடன் வாழ்த்தும்:*
த.வித்தகன், சாரங்கன்
(பேரப்பிள்ளைகள்)

*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*சங்கானை.*
(94944)



## 21ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்



செல்வி

**சுப்பிரமணியம் கமலேஸ்வரி**

**(கைதடி தெற்கு, கைதடி)**

கைதடியைச் சேர்ந்த செல்வி சுப்பிரமணியம் கமலேஸ்வரி தனது 21ஆவது பிறந்தநாளை நாளை (27.11.2001) செவ்வாய்க்கிழமை தற்போதைய வசிப்பிடமான கொக்குவில் மேற்கு, கொக்குவிலில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

கமலேஸ்வரியை அப்பா, அம்மா, வவுனியாவில் வசிக்கும் அண்ணா, அண்ணி, பிள்ளைகள், இத்தாலியில் வசிக்கும் அக்கா, அத்தான், பிள்ளைகள், சின்னக்கா, சின்னத்தான், பிள்ளைகள், சின்னண்ணா, சுவிஸில் இருக்கும் அக்கா, அத்தான், பிள்ளைகள், அண்ணா, அண்ணி மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் வைரவர் கிருபையால் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என வாழ்த்துகின்றார்கள். அத்துடன் செல்வியை வாழ்த்திட பிறந்தநாள் வைபவத்தில் கலந்துகொள்ளுமாறும் உற்றார், உறவினர், நண்பர்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*வாழ்த்துபவர்:*
திரு.எஸ்.சுப்பிரமணியம J.P.
(அப்பா - த.தொ.மே.ப.நோ.கூ.சங்கம், கைதடி),
திருமதி சு.சிவபாக்கியம் (அம்மா).

*கொக்குவில் மேற்கு,*
*கொக்குவில்.*
(94943)



## துயர் பகிர்கின்றோம்

பேராதனை பல்கலைக்கழக (வெளிவாரி) இறுதியாண்டு மாணவி

செல்வி தாரணி அவர்களின் அன்புத்தந்தையார்

**தாவடியூர் கணபதிப்பிள்ளை கமலேந்திரன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துத் துயரில் பங்குகொள்கிறோம்.

யாழ். - பேராதனை பல்கலைக்கழக
வெளிவாரி பட்டப்படிப்பு
மாணவர் ஒன்றியம்.

*புதிய உயர் கல்லூரி,*
*ஆரியகுளம்.*
(94948)


## வடலியடைப்பு பிரதேசம் இருளில்

யாழ்ப்பாணம்,நவ.26

விசமிகள் சிலரது நடவடிக்கைகளால் வடலியடைப்புப் பிரதேசத்துக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்து அடிக்கடி இது போன்ற சேஷ்டைகளால் சுமார் 200 மின் பாவனையாளர்களுக்கான விநியோகம் தடைப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அப்பிரதேச மக்கள ஈ.பி.டி.பி. கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவருமான ந.திரிலோகநாதனிடம் முறையிட்டிருக்கின்றனர். இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தான் முறையிட்டிருப்பதாக திரிலோகநாதன் தெரிவித்தார். (ஐ)

## குவைத் பணத்தை மீளப்பெற வசதி

1990 இல் ஏற்பட்ட வளைகுடா யுத்தத்தின் போது, குவைத்தில் இருந்து வெளியேறிய இலங்கையர்களால் கொழும்பு வங்கிகளில் வைப்பிலிடப்பட்ட குவைத் நாட்டுப் பணத்தை தற்போது உரியவர்கள் மீளப்பெற வசதி செய்யப்பட்டிருக்கிறது.

குவைத்தில் தொழில் புரிந்தமைக்கான ஆவணங்கள், கடவுச்சீட்டு என்பவற்றுடன் வங்கிகளுக்குச் சென்று பணத்தை மீளப்பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விவரங்களைப்பெற 01-729321 என்ற தொலைபேசி இலக்கத்தில் எஸ்.ஸ்கந்தராஜா என்பவருடன் தொடர்புகொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ஓட்டோ சாரதி அடித்துக் கொலை

இரத்தினபுரி,நவ.26

பலாங்கொடை நகரில் சனி நள்ளிரவு 12 மணியளவில் ஐதேக. ஆதரவாளர் ஒருவர் கொலை செய்யப்பட்டார். 34 வயதுடைய ஏ.ஆர்.பி. தொடங்கஸ்லந்த என்பவரே கொலை செய்யப்பட்டவராவார். பலாங்கொடை பொதுச் சந்தைக் கட்டடத் தொகுதிக்கு முன்னாள் இவரது சடலமும் இவர் ஓட்டிச் சென்ற ஓட்டோவும் காணப்பட்டன.

அவர் கடுமையாகத் தாக்கப்பட்டே கொல்லப்பட்டுள்ளார். அவருடைய ஓட்டோ அடித்து நொறுக்கப்பட்டிருந்தது. சடலம் பலாங்கொடை வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக எவரும இதுவரை கைது செய்யப்படவில்லை. தீவிர விசாரணை மேற்கொள்ளப்படுவதாக பலாங்கொடை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.குமாரசிங்க தெரிவித்தார். ஐதேக.உப தலைவர் காமினி அத்துக்கோரள உட்பட பிரதேச ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்கள் சந்தேக நபர்களைக் கைது செய்ய வேண்டுமென கோரியுள்ளனர்.

## பொறுப்பதிகாரி மீது கான்ஸ்டபிள் தாக்குதல்

திருகோணமலை மொரவெல பொலீஸ் பயிற்சிப் பாடசாலைப் பொறுப்பதிகாரி ஜயதிலகமீது பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கிரனேட் தாக்குதல் நடத்தினார். எனினும் காயம் எதுவும் இன்றி அவர் உயிர்தப்பினார். இந்தச் சம்பவம் சனிக்கிழமை மாலை நடந்தது. ரிசேர்வ் பொலீஸ் கான்ஸ்டபிளான பண்டாராவே போதையில் இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்பட்டது. அவரும் மற்றும் நான்கு பொலீஸாரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.


## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்மா,
வாதநோய்கள், வலிப்புநோய்,
பீனிசம், தலையிடி,
தலை, கால் அவியல்,
சரும நோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக் கசிவு, கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு, மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபலமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்.

**வேலணை**
வைத்திய கலாநிதி
**சி. இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459
(9167)



## 'வான்முழக்கம்'

**மாதாந்த சஞ்சிகை வெளியீட்டு விழா**

*பிரதம விருந்தினர்:-* பேராசிரியர் அ.சண்முகதாஸ்
(பீடாதிபதி, உயர் பட்டப்படிப்புகள் பீடம் - யாழ்.பல்கலைக்கழகம்) ,

*ஆக்கியோன்* :- வே.தவச்செல்வன் (I.B.C., யாழ்.நிருபர்)

*இடம்* :- *நூலக கேட்போர் கூடம், யாழ். பல்கலைக்கழகம்*

*காலம்* :- 26.11.2001 பிற்பகல் 3.30 மணி

*அனுசரணை:-* யாழ்.பல்கலைக்கழக கிளி.மாவட்ட மாணவர் ஒன்றியம்

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிளி.மாவட்ட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(94951)


## இவரைக் காணவில்லை



மூர்த்தி வளவு, தெல்லிப்பழையைச் சேர்ந்த

திருமதி

**கதிரவேலு இரத்தினம்**

என்பவரை 24-11-2001 சனிக்கிழமை முதல் காணவல்லை. இவரைக் கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

சி.செல்லையா (C.T.B.),
C/O சுப்பிரமணியம்,
4ஆம் கட்டை, ஆனைக்கோட்டை.
தொலைபேசி: 2299

(94949)

# மரண அறிவித்தல்கள்

## தங்கராசா முத்து

நல்லூர் கிழக்கு, ஆசீர்வாதப்பர் வீதியைச் சேர்ந்த தங்கராசா முத்து நேற்று (25.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2001) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 10.00 மணிக்கு கொட்டடி பெந்தேகொஸ்தே சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.ஐ.சிவலிங்கம்
(மருமகன்)

*205/11, மூத்த விநாயகர் வீதி,*
*நல்லூர்.*
(94937)

## கணபதிப்பிள்ளை கமலேந்திரன்

(முன்னாள் கல்விசாரா ஊழியர், வசாவிளான் ம.ம.வி.)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தூர்க்காபுரத்தினை வசிப்பிடமாகவும் தற்காலிகமாக வன்னியசிங்கம் வீதி, தாவடியில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை கமலேந்திரன் நேற்று (25-11-2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் தாரணியின் (மாணவி, பேராதனை வெளிவாரிப்பட்ட இறுதியாண்டு) அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (வாத்தியார்) - ருக்குமணி தம்பதியினரின் அன்பு மகனும் குபேந்திரபதி, ஜெயமணி, ஞானேந்திரன், கருணேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அங்கயற்கரசி மற்றும் வேலும்மயிலும் (U.N.H.C.R. நுண்கருத்திட்டம் - யாழ்.செயலகம்), சிவசோதி, சுந்தரமூர்த்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் திருமதி அன்னலட்சுமி, திருமதி சாரதாம்பாள் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2001) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.அன்னலட்சுமி (மனைவி),
க.தாரணி (மகள்)

*'சிவபதி'*
*வன்னியசிங்கம் வீதி,*
*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*
(94942)

## வினாசித்தம்பி வேலுப்பிள்ளை

(மலாயன் பென்சனியர்)

காரைநகர், மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் 154/8C, ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி வேலுப்பிள்ளை நேற்று (25.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னம்மாவின் அன்புக் கணவரும், மகேஸ்வரி, சிவனேஸ்வரி, பரமேஸ்வரி, சிவம் (மலேசியா), சிவா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், போரூட்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிந்தாதேவியின் மாமனாரும், தீபா, திலக், அகில் ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2001) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு ஆத்திசூடி வீதி, கந்தர்மடத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவா (மகன்)

*154/8C, ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்.*
(94946)

## தம்பிஐயா சின்னம்மா

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிஐயாவின் மனைவி சின்னம்மா நேற்று (25.11.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2001) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பேரன்
ஐங்கரன் புடவை மாளிகை,
கோண்டாவில்.

*கு.தவமணி,*
*5/2, வயல் கரைலேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம.*
(94953)

# தமிழர் ஆசிரியர் சமூகமும் முழுத் தமிழ் மக்களும் ஒன்று திரண்டு தமிழர் கூட்டமைப்பை ஆதரிப்போம்!

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

**தமிழ் மக்களின் முக்கிய தொழிற்சங்கங்களில் ஒன்றான இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பை ஆதரிக்க முடிவு செய்துள்ளது.**

**இது தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம், தலைவர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் ஒப்பமிட்டு விடுத்திருக்கும் அறிக்கை இங்கு முழுமையாகப் பிரசுரமாகிறது.**

எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் இலங்கையின் 12ஆவது நாடாளுமன்றத் தேர்தல், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் மதிநுட்பத்துடனும், நிதானத்துடனும் அணுகவேண்டிய தேர்தலாக அமைகின்றது.

இந்நாட்டில் புரையோடிப்போயிருக்கின்ற இனப்பிரச்சினை காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் தமிழர்களே. தமது சொத்துக்களையும், பொருளாதாரத்தையும், கல்வியையும், உயிர்களையும், வாழ்க்கையையும் இந்த இனப்பிரச்சினை காரணமாக தமிழ் மக்கள் இழந்து போயுள்ளார்கள். சொந்த நாட்டிலே அகதிகளாக வாழவேண்டிய அவலம் எம் மக்களுக்குக் கிடைத்துள்ளது. யுத்தம் காரணமாக அளவற்ற மனித உயிர்கள் பலியாகிவிட்டன. யுத்தத்தின் கோரமான விளைவுகள் எமது எதிர்காலச் சந்ததியையும் பாதிக்கக் கூடிய அளவுக்கு ஒரு துன்பகரமான சூழ்நிலையில் தமிழ் மக்கள் வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

### தரப்படுத்தல்

சுதந்திரமடைந்த காலம் தொட்டு தமிழ் மக்கள் படிப்படியாக இந்நாட்டில் ஓரங்கட்டப்பட்டே வந்துள்ளார்கள். அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்கள் காரணமாக தமிழ் மண் அபகரிக்கப்பட்டது. தமிழ் மொழி உரிமைகள் பறிக்கப்பட்டன. மலையக மக்களின் வாக்குரிமையும் பிரஜா உரிமையும் பறிக்கப்பட்டன. தரப்படுத்தல் மூலமாக தமிழ் மாணவர்கள் கல்வியில் ஒதுக்கப்பட்டார்கள்.

கல்வி என்பது அடிப்படை மனித உரிமையாகும். கல்வியைப் பாரபட்சமின்றி சகலமக்களுக்கும் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். ஓர் இனத்தின் கல்வியைச் சீர்குலைப்பது மூலமாக அவ்வினத்தின் வளர்ச்சியையும், எழுச்சியையும் இலகுவாகத் தடுத்துவிட முடியும். எமது நாட்டில் தமிழ் மாணவர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் கல்வி தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் நிலவுகின்றன. பாடநூல் ஆக்கம், கல்வி வளங்களின் ஒதுக்கீடு, பௌதீக வசதிகள், ஆசிரிய நியமனங்கள், அதிபர் மற்றும் கல்வி நிர்வாகிகளின் நியமனங்கள், உயர்கல்வி வாய்ப்புகள் போன்ற பல்வேறு விடயங்களிலும் தமிழ் மாணவர்களின் கல்வியில் பாரபட்சம் காட்டப்படுகின்ற நிலைமை தொடர்ந்து நிலவுகின்றது. அப்பாரபட்சங்கள் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டாலும் அவை பற்றி அக்கறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. இந்நாட்டை மாறி மாறி ஆண்ட இரு கட்சிகளும் இப்பாரபட்சங்களை தமிழ் மாணவர்களது கல்விமீது இழைத்தே வந்துள்ளன.

### ஜனநாயக வழிமுறைகளும் போராட்டங்களும்

தமது பிரச்சினைகளுக்கு ஜனநாயக வழிமுறைகளுக்கூடாகத் தீர்வைக்காண தமிழர்கள் முயற்சித்த போதெல்லாம் அவை தோல்வியிலேயே முடிவடைந்தன. இந்நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களுக்குரிய உரிமைகளை வழங்குவதில் பெரும்பான்மை இனத் தலைவர்கள் நாட்டம் கொண்டிருக்கவில்லை. தமிழர்களுக்கு உரிமைகளை வழங்குவதற்காக எழுதப்பட்ட ஒப்பந்தங்களும், ஏற்பாடுகளும் கூட, பெரும்பான்மை இன அரசாங்கங்களால் கிழித்தெறியப்பட்டதும், புறந்தள்ளப்பட்டதும்தான் இந்நாட்டின் அரசியல் வரலாறாக அமைகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், அடக்கியொடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடுதலைக்காக தமிழ் இளைஞர்கள் ஆயுதம் தாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. விடுதலைக்கான ஜனநாயக வழியிலான உரிமைப்போராட்டங்கள் ஒடுக்கப்படுகின்ற நிலையில், ஆயுதப் போராட்டங்கள் முகிழ்ப்பதென்பது உலக வரலாற்றில் புதுமையான விடயமல்ல. ஆனால் இந்நாட்டில் தமிழ் இளைஞர்களின் நியாயமான போராட்டங்களை பயங்கரவாதமென பெரும்பான்மையின அரசாங்கங்கள் முத்திரை குத்தின. ஆனால் இன்று தமிழ் இளைஞர்கள் தமது தொடர்ச்சியான நீண்டகாலப் போராட்டங்களின் மூலமாக இந்நாட்டின் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமையற்ற அவல நிலையை உலக நாடுகளின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் வகையில் அவர்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்ற சர்வதேச அழுத்தங்களும் இப்போது இந்நாட்டு அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளாக பிளவுண்டு நின்றதும் தமிழ் மக்களின் எதிரிகளுக்குச் சாதகமாக அமைந்துவிட்டது. அத்தோடு சில அற்ப சலுகைகளுக்காக அரசாங்கத்தோடு ஒட்டி உறவாடுகின்ற கட்சிகளும், குழுக்களும் ஒவ்வொரு காலகட்டத்திலும் இருந்தே வந்திருக்கின்றன. இந்தக் காரணங்களினால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் ஒரே குரலாக, பலமான குரலாக முன்னெடுக்கப்பட முடியவில்லை.

மக்களின் உரிமைப் போராட்டத்திற்கான - ஜனநாயக ரீதியான - வழிமுறைகள் என்ற வகையில் நாடாளுமன்றத்தை தமிழ் மக்கள் ஒதுக்கிவிட முடியாது. தமது உரிமைப் போராட்டத்திற்கான ஒரு தளமாக நாடாளுமன்றத்தையும் பயன்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும். ஆகவே தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒன்றுபட்ட குரலில், பலம் வாய்ந்த முறையில் ஒலிக்கச் செய்வதற்கேற்ற வகையில், பிரதிநிதிகளைத் தெரிவு செய்யவேண்டிய கடப்பாடு தமிழ் மக்களுக்கு உண்டு. ஆகவேதான் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை தமிழ் மக்கள் மிக நிதானமாக அணுக வேண்டுமென்று வேண்டிக் கொள்கின்றோம்.

### உரிமைக்கான ஒன்றுபட்டகுரல்

இத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழ் ஈழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர முன்னணி (சுரேஷ் அணி) ஆகிய நான்கு தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டமைப்பாக போட்டியிடுவது இன்றைய காலகட்டத்தில், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும். இந்தக் கூட்டு வெறும் தேர்தலுக்கான கூட்டாக அல்லாமல், தமிழ் மக்களின் பிரச்சினைகளை முன்னெடுக்கக்கூடிய நிரந்தரமான கூட்டாக அமைய வேண்டுமெனவும் - எதிர்காலத்தில் ஏனைய தமிழ்க்கட்சிகளும் இக்கூட்டமைப்பிற்குள் உள்வாங்கப்பட வேண்டும் என்றும் - விரும்புகின்றோம்.

தற்போதைய விகிதாசாரத் தேர்தல முறைமையை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் - இவ்வாறு ஒன்றிணைந்து போட்டியிடுவது, தமிழ் மக்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவங்களை அதிகரிக்கச்செய்து, அதன்மூலம் தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்தினை ஒன்றுபட்டு, பலமான குரலாக வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தும் என்று நம்புகின்றோம். பல்வேறு கட்சிகளாகப் பிரிந்துநின்று போட்டியிட்டு தமிழர்களின் பிரதிநிதித்துவங்கள் இழக்கப்பட்ட வரலாற்றையும் நாம் மறத்தலாகாது.

இந்நாட்டில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும் அவர்கள் தமது நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும்போது, தமிழ் மக்களின் பொதுவான உரிமைப் பிரச்சினைகளையும் தத்தமது பிரதேச நலன்களையும் முன்னெடுக்கக்கூடிய ஆற்றல் உள்ளவர்களாகத் தெரிவுசெய்துகொள்ளுதல் அவசியமாகும் எனக் கருதுகின்றோம்.

ஆகவே, இந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஓரணியாகப் போட்டியிடும் நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பிற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது ஆதரவைத் தெரிவிக்கின்றது. தமிழாசிரியர் சமூகமும் தமிழ் மக்களும் ஒன்று திரண்டு இக்கூட்டமைப்பை ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம்.

இலங்கை அரசு போரை நிறுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைகளை நடத்தி, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காணவேண்டுமென்பதே எமது சங்கத்தின் நிலைப்பாடாகும். எமது இந்த நிலைப்பாட்டை இவ்வருடம் பங்குனி மாதம் திருகோணமலையில் நடைபெற்ற எமது சங்கத்தின் 27ஆவது வருடாந்த மாநாட்டில் கோரிக்கையாக முன்வைத்திருந்தோம். இக்கோரிக்கையை ஒட்டிய வகையிலேயே நான்கு கட்சி கூட்டமைப்பின் கொள்கையும் அமைவதன் காரணமாக இக்கூட்டமைப்பிற்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தத்தம் பிரதேசங்களில் சமத்துவமான உரிமைகளுடன் வாழுவதற்காகக் குரல் கொடுக்கக் கூடிய தமிழ்த் தலைமைத்துவங்களை இனங்கண்டு தமது ஆதரவை வழங்குவது அவசியமானதாகும்.

இந்நாட்டில் தமிழர்கள் எங்கு வாழ்ந்தாலும், தமது சுய அடையாளங்களுடன், தமது மொழி, சமய கலாசார விருத்தி நிலைமைகளைப் பேணக்கூடியவர்களாக வாழ வேண்டும். கல்வி, பொருளாதார விடயங்களில் அவர்களுக்கான வாய்ப்புக்கள் சமத்துவமாக தரப்படுதல் வேண்டும். இவ்வாறான உரிமைகளுக்கு குரல் கொடுக்கக்கூடிய நேசசக்திகளை ஆதரிப்பது வடக்கு - கிழக்கிற்கு வெளியே வாழுகின்ற தமிழ் மக்களின் கடமையாகும்.

### வன்முறையற்ற தேர்தல்

இத்தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளுக்கும் வேட்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் வேண்டுகோள் ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். நேர்மையானதும், சுதந்திரமானதும், வன்முறையற்றதுமான ஒரு தேர்தலை நடத்துவதற்கு சகல தரப்பினரும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம். ஒரு தேர்தலில் மக்கள் தமது விருப்பத்தையும் தேர்வுகளையும் சுதந்திரமாகத் தெரிவிப்பதற்கு இடமிருக்க வேண்டும். வன்முறைகளும், பலவந்தங்களும், மோசடிகளும் ஒரு தேர்தலில் இடம்பெறுமாக இருந்தால் அத்தேர்தல் மக்களின் தேர்வை பிரதிபலிப்பதாக அமையமாட்டாது. நமது நாட்டில் வன்முறை கலந்த தேர்தல் கலாசாரம் ஒன்று உருவாகி வருவது தேர்தலின் நம்பகத்தன்மையைக் குறைப்பதாக அமைகின்றது. ஆகவே கட்சிகளும், வேட்பாளர்களும் வன்முறையற்ற ஒரு தேர்தலை உறுதிப்படுத்த வேண்டுமெனவும் - மோசடிகள் அற்ற நேர்மையான ஒரு தேர்தலை நடத்தவேண்டிய கடப்பாட்டை அரசு நிறைவேற்ற வேண்டுமெனவும் - வேண்டுகிறோம்.

### வாக்குரிமையை பயன்படுத்தல்

இத்தேர்தலில் தமிழ் மக்கள் தமது வாக்களிக்கின்ற அடிப்படை உரிமையை கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்தாதவிடத்து அவ்வாக்குகள் தவறான கரங்களால் பயன்படுத்தப்பட்டு, தமிழ் மக்களது விருப்பத்திற்கு மாறான ஓர் அபிப்பிராயத்தை ஜனநாயகத்தின் பெயரால் பிரதிபலிக்கச் செய்யும் ஓர் ஆபத்தான விளைவை ஏற்படுத்தலாம்.

ஆகவே, எல்லாத் தமிழர்களும் தமது வாக்குகளை கட்டாயமாகப் பயன்படுத்தி, தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும் என்று ஜனநாயகத்தின் பெயரால் கேட்டுக் கொள்கின்றோம். (ஐ)

## சுகாதாரமும் உடற்கல்வியும் விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி

யாழ்ப்பாணம்.நவ.26

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்துக்கான விடைத் தாள்களைத் திருத்தும் பணி இந்த முறை யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக நடைபெறவுள்ளது.

இதற்கான மதிப்பீட்டு நிலையம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படும்.

மேற்படி பாடத்துக்குரிய விடைத் தாள்களைத் திருத்தும் பணியில் ஈடுபட விரும்பும் ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை யாழ். வலயக் கல்விப் பணிமனையில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பெற்றுக்கொள்ளலாம் என்று உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, பிரபு, கௌதமி, சோ நடித்த
குரு சிஷ்யன்
(சீஸ்ஸ்)
காட்சிகள்: - 11.00, 3.00 (புதிய நேரம்)
(94916)

ராஜா யாழ்ப்பாணம்
கமல், மனீஷா மற்றும் பலர் நடித்த
ஆளவந்தான்
தினசரி:- 10.30,2,5 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30,2,5 (புதிய நேரம்)
ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளவும்.
(C19317)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த், லைலா மற்றும் பலர் நடித்த
கள்ளழகர்
(ரீலீஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-19383)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை அதிபர்
திருமதி இ.இராசரத்தினம் அவர்கள்
ஆசிரிய சேவை வகுப்பு Iஇற்கும் அதிபர் சேவை தரம்2 IIஇற்கும் பதவி உயர்வுபெற்றதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதுடன், அவரின் அதிபர் சேவை மேன்மேலும் தொடர, இறைவனைப் பிரார்த்தித்து, மனதாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.
ஆசிரியர்கள்,மாணவர்கள், கிளி/இயக்கச்சி அ.த.க.பாடசாலை.
அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள், யா/துன்னாலை தெற்கு அ.த.க.பாடசாலை.
துன்னாலை தெற்கு, கரவெட்டி. (94950)

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001 யாழ்.மாவட்டம்
- முஸ்லிம் காங்கிரஸ் -



மெக்சா முபீன்
☆ தமிழர் தன்மானம் காத்திட, தமிழ், முஸ்லிம் ஒற்றுமை வளர்ந்திட, மனிதாபிமானம் மிக்க தமிழ்பேசும் மக்களின் உண்மை உணர்வை வெளிப்படுத்திட, குடும்பத்திற்கு ஒரு வாக்கை தமிழ் முஸ்லிம் ஒற்றுமையின் பெயரால் மனிதாபிமானத்துடன் அளித்திடுவோம்!
12
(94854)
விளம்பர அன்பளிப்பு: வலி.வடக்கு குரும்பசிட்டியைச் சேர்ந்தவரும் தற்போது கோண்டாவிலில் வசிப்பவருமான த.சுதாகரன் என்பவரால் அளிக்கப்பட்டது.

# கிழக்கில் படை நிலைகள் மீது பரீட்சார்த்த தாக்குதல்கள்

## புலிகளின் அரசியல்துறை அறிக்கை

கொழும்பு,நவ.26

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மக்களை சுதந்திரமாக நடமாட விடாது தடுத்து நிறுத்தி சோதனையிடும் படை முகாம்களைத் தாக்கி அழிக்கும் பரீட்சார்த்த தாக்குதல்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் உள்ள படை முகாம்களைத் தாக்கி அழிக்கும் பரீட்சார்த்த முயற்சியின் ஓர் அங்கமாகவே கடந்த 10ஆம் திகதி மட்டக்களப்பு பாலமீனமடு மற்றும் ஏறாவூர் ஆகிய இடங்களில் அமைந்திருந்த பொலீஸ் காவலரண்கள் தாக்கியழிக்கப்பட்டன.

இந்தத் தாக்குதல் சம்பவங்களில் 3பொலீஸாரும் ஓர் ஊர்காவலரும் கொல்லப்பட்டனர் - என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# நாடு முழுவதும் தீவிர பாதுகாப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் இன்றைய பிறந்தநாள் மற்றும் நாளை அனுஷ்டிக்கப்படவிருக்கும் மாவீரர் நாள் என்பவற்றை ஒட்டி நாடு முழுவதும் பாதுகாப்புக் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றன.

தலைநகர் கொழும்பிலும் ஏனைய முக்கிய இடங்களிலும் படையினர் விழிப்பு நிலையில் இருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விமான நிலையம், துறைமுகங்கள், வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் உட்பட கேந்திர நிலையங்களின் பாதுகாப்பும் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. (ஐ)

### வன்செயல்களை தூண்டிவிட முயற்சியாம்

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினரைப் பயன்படுத்தி அடுத்தவாரம் வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்படவுள்ளன - என்று தேசிய புலனாய்வுப் பணியகம் அறிவித்துள்ளதாக ஐதே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

நாட்டின் பல பாகங்களிலும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவினர், நவம்பர் 28ஆம் திகதி புதன்கிழமை தமது பணிகளை ஆரம்பிப்பர் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. கடந்த சில வாரங்களாக அரச வாகனங்களையும் ஆயுதங்களையும் பொறுப்பேற்றமைக்காக ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் எதிர்க்கட்சியினரால் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (ஐ)

### சிறுவர் பூங்கா அமைப்பு

ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் சிறுவர் பூங்கா துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதியினை இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் வழங்கி உள்ளனர். (ஐ-72)

### படையினர் பாதுகாப்புடன் விநியோகம்

குருநகர் பகுதியில் வாக்காளர் அட்டைகள் இராணுவத்தினரின் பாதுகாப்புடன் உரியவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நேற்று ஞாயிற்றுக்கிழமையும் வாக்காளர் அட்டைகள் குருநகர்ப் பகுதியில் விநியோகிக்கப்பட்டன. வாக்காளர் அட்டை விநியோகித்த தபால் ஊழியருடன் படையினரும் சைக்கிளில் உடன் சென்றனர். (ஐ-51)

### மாவீரர்தின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்கட்டிச்சோலையில் மாவீரர் உருவப் படக் கண்காட்சி ஒன்றும் இடம்பெறுகின்றது. சுமார் 4 ஆயிரம் மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. மாவீரர்களின் பெற்றோர் அவற்றுக்கு அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுமுதல் மூன்று தினங்கள் மாவீரர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. செவ்வாய்க்கிழமை மாலை 5.55 மணிக்கு ஈகைச்சுடர் ஏற்றல், மாவீரர் உரை ஆகியவற்றுடன் நிகழ்வுகள் பூர்த்தியடையும். மாவீரர் தினத்தை ஒட்டி பெரியளவில் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. மஞ்சள் சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன.

இதேவேளை -

வவுனியாவிலும் கிழக்கிலும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் ஆரம்பத்தில் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றிருக்கின்றன.

வவுனியாவில் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடும் ஆர்தீன் குழுவினர் நேற்று சாஸ்திரி - கூளாங்குளம், புதுக்குளம் ஆகிய இடங்களில் நடத்திய பொதுக் கூட்டங்களின் தொடக்கத்தில் மாவீரர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (ஐ-164-3)


PHYSICS

யோகேஸ்வரியா கல்வி நிலையம்

பலாலி வீதி, கந்தர்மடம் சந்தி அருகில்.

❖ மீட்டல் வகுப்புகள்

❖ குழு வகுப்புகள்

விரும்பிய அலகுகள், விரும்பிய காலத்திற்குள் முடிக்கப்படும்.

ஆசிரியர்:-

S.மூர்த்தி (B.Sc.)

(94945)



கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி

2002 இற்கான புதிய பிரிவுகள்

தரம்: 4,5,6,7,8,9,10, O/L வரை

ஆரம்பம்: 27.11.2001 3.30 p.m.

NOTE: புதிய அனுமதிகள்

27.11.2001 முதல் 09.12.2001 வரை

பெற்றுக்கொள்ளலாம்.

(94940)


### புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஷெல் தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. சனிக்கிழமை இரவு முதல் நேற்றுக்காலை வரை இத்தாக்குதல் தொடர்ந்தது.

தரவை, திகிலுவெட்டை, குடும்பிமலை ஆகிய பகுதிகளில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

மின்னேரியா முகாமில் இருந்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்புவதற்காகவே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ)

### மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொன்னையா இந்தத் தகவலைத் தெரிவித்தர்.

மகேஸ்வரன் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர்களும் நாளை செவ்வாய்க்கிழமை தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-உ)

### திருகோணமலைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, கடற்படைச் சீருடையில மூன்று அல்லது நான்கு டிரக்குகளில் வந்திறங்கும் புலிகள், பிரதான வாசலுக்கு ஊடாக நுழைந்து, தமக்கென ஒதுக்கப்பட்ட இலக்குகளுக்கு முன்னேறி நிலையெடுப்பது தாக்குதலின் இரண்டாவது கட்டம்.

இதற்குத் தேவையான டிரக்குகளைப் புலிகள் ஏற்கனவே பெற்று, கடற்படையினுடையவை போன்று அவற்றை உருமாற்றித் தயார் செய்துள்ளனர்.

அதேசமயம் கரும்புலிகள் அணிகள் உட்பட கடற்புலிகளைக் கொண்ட இருபது படகுகள் கடற்படைத் தளத்தின் பல்வேறு நிலைகள் மற்றும் இலக்குகள் மீது தாக்குதல் தொடுப்பது மூன்றாவது கட்டம்.

கடற்படைக் கப்பல்கள் தரித்து நிற்கும் இறங்குதுறைகளும் இந்த இலக்குகளில் அடங்கும். அதிவேக டோறாத் தாக்குதல் படகுகளைக் கைப்பற்றி எடுத்துச் செல்லும் திட்டமும் புலிகளிடம் இருந்தது.

திருகோணமலைத் துறைமுகத்துக்கு வெளியே அமைந்திருக்கும் சிறிய தீவான பவுல் தீவைக் கைப்பற்றி, அங்கிருந்தபடியே கடற்படை நிலைகள்மீது மோட்டார்த் தாக்குதலைத் தொடுக்கவும் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்த இரகசியத் திட்டம் அம்பலத்துக்கு வந்ததை அடுத்து, இத்தகைய தாக்குதல்களில் இருந்து கடற்படைத் தளத்தைக் காப்பாற்றுவதற்கான அவசிய திட்டங்களை மூத்த படை அதிகாரிகள் அவசர அவசரமாக மேற்கொண்டனர்.

- இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ)


SUBRA (14)

தரம் 3 - O/L வரையான

புதிய பிரிவு ஆரம்பம்:

01.12.2001 (சனி)

காலை 7.30

(C19468)




விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குச் சென்ற முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளருமான பொன்.செல்வராசா அம்பிலாந்துறையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (படம்: இரா.துரைரத்தினம்)

### ஏறாவூரில் ஐ.தே.க. அலுவலகம் சேதம்

செங்கலடி,நவ.26

ஏறாவூர் வீதியில் அமைந்துள்ள ஐ.தே.கட்சியின் அலுவலகம்மீது கைக்குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றது. டிரக் ஒன்றில் வந்தவர்கள் இத்தாக்குதலை மேற்கொண்டனர். கட்சி ஆதரவாளர்கள் மூவர் காயம் அடைந்தனர். அலுவலகம் சேதம் அடைந்தது என்று ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது. காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

### அரியாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லெப்டினன்ட் கடர் நிலவன் (இராமன் யசோதரன் - பரந்தன்)

இதேவேளை -

முல்லைத்தீவில் சுகயீனம் காரணமாக கப்டன் அதியமான் (தேவதாசன் ரிச்சேர்ட் - யாழ்ப்பாணம்) என்ற போராளி நேற்று முன்தினம் உயிரிழந்ததாகவும் புலிகள் அறிவித்தனர். (ஐ-164)

### ஐ.தே.கட்சி வேட்பாளர் விலகினார்

திருமலை மாவட்டத்தில் ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சட்டத்தரணி வரதர் தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் நன்மை கருதியும், தமிழ்க்கட்சிகளுக்கு இடையே ஏற்பட்டிருக்கும் ஐக்கியத்துக்கு மதிப்பளித்தும் தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து விலகுவதாக அவர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். (ஐ-6)

### காத்தான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குடி பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பொ.ஐ.மு. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் குண்டர்களே இத் தாக்குதலை மேற்கொண்டனர் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை -

நேற்றுமுனதினமும் ஐ.தே.கவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று காத்தான்குடியில் நடைபெற்றபோது, மேடையின் மீது காடையர்களால் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. ஆனால் பொதுமக்கள் அமைதியாக இருந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)


எமது புதிய வீடியோ CD வெளியீடுகள்

❖ ஷாஜகான்

❖ மனதைத் திருடிவிட்டாய்

விஷ்ணு வீடியோ

கே.கே.எஸ். ரோட், கோண்டாவில்.

எமது இன்றைய வீடியோ CD வெளியீடுகள்

☆ மனதை திருடிவிட்டாய்

☆ ஷாஜகான்

வீடியோ விமல் யாழ்ப்பாணம்

கல்வி பொ.த.ப. உயர்தரப் பரீட்சை முடிவுகள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளலாம்.

விரையுங்கள்:

உதயன் தொலைத் தொடர்பு நிலையம்,

சங்கரப்பிள்ளை வீதி,

மூத்த நயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

(94933)

பொறியியல் துறைக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கு எம் வாழ்த்துக்கள்!

உங்களுக்காகவென்றே தனித்துவம் வாய்ந்த பயிற்சி நெறியொன்றினை உருவாக்கியுள்ளோம்

ENGINEERING DRAWING WITH AutoCAD

ஆரம்பம் : 01.12.2001

மேலதிக விபரங்களுக்கு ☞ இயக்குநர், IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் - 2001

நான்கு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் மாபெரும் எழுச்சிக் கூட்டம் இன்று.

அனைத்து வேட்பாளர்களும் ஒரே மேடையில்!

இடம்: சித்தன்கேணி பிள்ளையார் கோயில் முன்றில்

காலம்: இன்று (26.11.2001) திங்கள்

நேரம்: பிற்பகல் 3.30 மணி

அனைத்துத் தன்மானத் தமிழர்களே! இன்று அனைவரும் ஒன்று கூடுவீர்.

- சித்தன்கேணி வாழ்மக்கள்.

(94857)



உண்மையான சுதந்திரமும், சகோதரத்துவமும்.

சமாதானமும் மலர மீன் சின்னத்துக்கு வாக்களியுங்கள்

தும்பிராஜா சுபத்திரன் (றொபேட்)

சுயேச்சைக்குழு

ஈ.பி.ஆர்.எல்.எவ்.

(93950)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.11.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.